

கலைஞர் 100 1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 92 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 24 – வெள்ளிக்கிழமை 10 நவம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 92 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 24 - Friday 10 November 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## புதியதாக கண்டறியப்பட்ட 7.35 லட்சம் பயனாளிகள் உள்பட

# 1,13,84,300 பேருக்கு ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று வழங்குகிறார்!

**சென்னை, நவ. 10– கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1,13,84,300 பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கும் விழா சென்னையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலும், இதர மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் தலைமையிலும் இன்று (10–11–2023) நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.**

தமிழ்நாட்டில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் மட்டுமின்றி, மகளிர் நலன் காக்கும் திட்டங்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

மகளிருக்கு அதிகாரம் வழங்கும் முயற்சியில் இந்தியாவிலேயே அனைத்து மாநிலங்களையும், பின்னுக்கு தள்ளி முந்தி நிற்கிறது தமிழ்நாடு அரசு. அந்த வகையில்தான், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 27–3–2023 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மகளிர் உரிமைத் தொகை குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

குடும்பத்திற்காக வாழ்நாள் முழுவதும் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்பிற்கு அங்கீகாரம் அளிக்கும் வகையில், அவர்களுக்கு ஆண்டிற்கு ரூபாய் 12,000/– உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமானது பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் அவர்கள் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் உயரிய நோக்கம் கொண்டது.



தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24–7–2023 அன்று தொடங்கி வைத்தார். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 இலட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வரப்பெற்ற நிலையில், அவற்றில் தகுதியுள்ள 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான 15–9–2023 அன்று காஞ்சிபுரத்தில் முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர், மாதந்தோறும் ரூ.1000/– பெற்று பயன்பெறும் வகையில் தொடங்கி வைத்தார்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ், முகாம்களில் விண்ணப்பித்து கள ஆய்வு நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு, தற்போது புதிதாக கண்டறியப்பட்டுள்ள 7 இலட்சத்து 35 ஆயிரம் பயனாளிகளுக்கும், ஏற்கனவே, வழங்கப்பட்டு வரும் 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகளுடன் சேர்த்து, மொத்தம் 1 கோடியே 13 இலட்சத்து 84 ஆயிரத்து 300 மகளிருக்கு, நவம்பர் மாதத்திற்கான உதவித் தொகையினை இன்று (10.11.2023) வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இத்திட்டத்தில் தற்போது இணைந்துள்ள 7 இலட்சத்து 35 ஆயிரம் மகளிர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு உரிமைத் தொகை வழங்கிடும் விழா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், இன்று (10–11–2023) காலை 10.30 மணியளவில் சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அனைத்து மாவட்டங்களிலும் இன்று (10.11.2023) அமைச்சர் பெருமக்கள் தலைமையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா நடைபெறவுள்ளது.

---

### மக்களவைத் தேர்தல் குறித்து

## சென்னையில் இந்திய தேர்தல் ஆணையம் ஆலோசனை!

### தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலத் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்பு!

*சென்னை, நவ.10-*

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் அதிகாரிகளுடன் தேர்தல் துணை ஆணையர்கள் சென்னையில் ஆலோசனை மேற்கொண்டனர்.

மக்களவைக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இந்த நிலையில் தேர்தல் முன்னேற்பாடுகள் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம் சென்னையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் ஆலோசனை மேற்கொண்டனர்.

துணைத் தேர்தல் ஆணையர்கள் தர்மேந்திர ஷர்மா, நிதேஷ் வியாஸ், மனோஜ்குமார் சாகு, தேர்தல் ஆணைய இயக்குநர் பங்கஜ் ஸ்ரீவட்சவா ஆகியோர் தென் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தில், தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு பங்கேற்றார்.

கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா ஆகிய மாநிலங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகளும், புதுச்சேரி, அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு கள் ஆகிய யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகளும் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

தேர்தலுக்கான மின்னணு இயந்திரங்கள், உபகரணங்கள், வாக்குச்சாவடி, தேர்தல் பணியாளர்கள், பாதுகாப்பு பணியாளர்கள், வாக்குச்சாவடிகள் தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

---

### தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை

## இயல்பை விட 15 % குறைவு!

*சென்னை, நவ.10-*

தமிழ்நாட்டில் அக்டோபர் முதல் டிசம்பர் இறுதி வரைக்கும் வடகிழக்கு பருவமழை காலமாகும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தாமதமாக தொடங்கி தாமதமாக நிறைவடைந்து. இதன் காரணமாக வடகிழக்கு பருவமழையும் தாமதமாகவே தொடங்கியது. அக்டோபர் 1 முதல் நேற்று வரை வழக்கமாக பெய்யும் மழை அளவை விட 15 சதவிகிதம் குறைவாகவே மழை பதிவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.



வழக்கமாக அக்டோபர் 1 முதல் நேற்றுவரை 243.6மி.மீ. மழை பதிவான நிலையில் தற்போது 206.4 மி.மீ. மழை மட்டுமே பெய்து உள்ளது. வடகிழக்கு பருவமழை தாமதமாக தொடங்கியிருந்தாலும் ஆரம்ப காலத்தில் மழை பெரிய அளவில் பெய்யவில்லை. இருந்த போதிலும் தென்கிழக்கு அரபிக்கடலில் மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதியில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவியது.

---

### டெல்லியில் காற்று மாசைக் குறைக்க

## செயற்கை மழைக்கு திட்டம்!

*புதுடெல்லி, நவ.10-*

தலைநகர் டெல்லியில் காற்று மாசு கடுமையாக இருந்து வருகிறது. காற்றின் தரக்குறியீடு 480க்கு மேல் சென்றது. நேற்று காலை டெல்லியில் ஒட்டு மொத்த காற்றின் தரக் குறியீடு 421 ஆக இருந்தது.

இது கடுமையான பிரிவில் உள்ளது. இதனால் மக்கள் கடும் அவதியடைந்துள்ளனர். காற்று மாசைக் குறைக்க மாநில அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் காற்று மாசைக் குறைக்க செயற்கை மழையை பெய்ய வைக்க திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக டெல்லி மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் கோபால்ராய், நிதி மந்திரி அதிஷி ஆகி யோர் ஐ.ஐ.டி. கான்பூர் குழுவுடன் ஆலோசனை கூட்டத்தை நடத்தினர். இதில் டெல்லியில் காற்று மாசைக் குறைக்க கிளவுட் சீடிங் மூலம் செயற்கை மழையை பெய்ய வைப்பது குறித்து விவாதிக்கப் பட்டது.

தற்போது ஐ.ஐ.டி. குழுவிடம் விரிவான திட்டத்தை டெல்லி அரசு கேட்டுள்ளது. டெல்லியில் காற்று மாசைக் குறைக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் இந்த திட்டம் பற்றி டெல்லி அரசு சமர்ப்பிக்க உள்ளது.

கோர்ட்டு அனுமதி அளித்தால் டெல்லி, மத்திய அரசும் செயற்கை மழை திட்டத்தை செயல்படுத்தும்.

செயற்கை மழையை உருவாக்க குறைந்த பட்சம் 40 சதவீத மேக மூட்டம் அவசியம் என்று ஐ.ஐ.டி. குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேக மூட்டம் வருகிற 20, 21ந் தேதிகளில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே அன்று செயற்கை மழையை பெய்ய வைக்கலாம் என்று அமைச்சர் கோபால் ராய் தெரிவித்தார்.

---

### தமிழ்நாடு அரசு இயற்றிய

## ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும்!

### சென்னை உயர்நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

சென்னை, நவ.10–

தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆன்லைன் சூதாட்டங்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு அரசு சட்டம் இயற்றியது. இந்த சட்டத்தை ரத்து செய்யக் கோரி ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் தரப்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்கு




சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சங்கா பூர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்குகளில், அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்ததை அடுத்து, நேற்று சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அமர்வு தீர்ப்பளித்தது.

தமிழ்நாடு அரசு இயற்றிய ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. திறமைக்கான ஆன்லைன் விளையாட்டுகளான ரம்மி, போக்கரை தடை செய்த பிரிவுகள் ரத்து செய்யப்படுகிறது. ஆன்லைன் ரம்மி உள்ளிட்டவற்றை விளையாடுவதற்கான வயது, நேரம் போன்றவற்றை அரசு நிர்ணயிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆன்லைன் சூதாட்டத்தை தடை செய்து தி.மு.க. அரசு நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை ஆளுநர் ரவி பல மாதங்கள் கிடப்பில் போட்டிருந்தார். தமிழ்நாடு அரசின் மசோதாவை ஆளுநர் திருப்பி அனுப்பிய நிலையில் தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பியது குறிப்பிடத்தக்கது.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 10-11-2023

# பெரியாரும் அறிவியலும் மயில்சாமி அண்ணாதுரையும்

**“யார் சொல்லியிருந்தாலும், எங்கு படித்திருந்தாலும், நானே சொன்னாலும் உனது புத்திக்கும் பொது அறிவுக்கும் பொருந்தாத எதையும் நம்பாதே. உன் சாஸ்திரத்தை விட, உன் முன்னோரை விட, உன் வெங்காயம் வெளக்கமாத்தை விட உன் அறிவு பெரிது. அதை சிந்தி, என பெரியார் சொல்லியிருக்கிறார்.**

பெரியாரின் கருத்துக்கள் அறிவியலோடு ஒத்துப்போகின்றன. குறிப்பாக இந்த வார்த்தை நிலவு பயணத்திற்கு ஒன்றிப் போகிறது.

நான் இதற்கு முன்னர் பல செயற்கைக் கோள்களை செய்திருந்தாலும், சந்திரயான் எனும் செயற்கைக்கோள்தான் எனக்கு ஒரு முகவரியை கொடுத்தது. அடையாளத்தை கொடுத்தது. இதற்கு பின்புலத்தில் பெரியாரின் இந்த வார்த்தைகள்தான் இருக்கின்றன. இதுதான் என்னுள் விதையை விதைத்தது.

நிலவில் நீர் இல்லை என்று சாஸ்திரத்தில் எழுதப்பட்டு உள்ளது. ஆனால் எனக்குள் ஒரு கேள்வி எப்போதும் இருந்து கொண்டே இருந்தது. அதாவது, நான் சிறு வயதில் இருக்கும் போது மற்ற எல்லா குழந்தைகளை போலவே வானத்தை பார்த்து வளர்ந்தவன்தான். அப்போதெல்லாம் தெருவிளக்கு ஏதும் கிடையாது. எனவே நிலவை தெளிவாக பார்க்க முடியும். இந்த பிரபஞ்சம் பல பில்லியன் கோடி கி.மீ. தொலைவுக்கு பரந்து விரிந்து இருக்கையில், நிலவு நமக்கு மிகவும் பக்கத்தில்தான், வெறும் 3 லட்சம் கி.மீட்டரில்தான் இருக்கிறது.

ஆக பூமியில் தண்ணீர் இருக்கும் போது நிலவில் மட்டும் எப்படி தண்ணீர் இல்லாமல் இருக்கும்? என்று கேள்வி எழுந்தது. இந்த கேள்விக்கு திருவள்ளுவரின் கருத்தும் எனக்குள் ஊக்கத்தை ஏற்படுத்தியது. அதாவது, ‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு’ என்று கூறியிருந்தார். பெரியாரும் திருக்குறளை தவிர வேறு எதையும் தமிழ் இலக்கியமாக ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த கருத்துக்கள்தான் நான் விஞ்ஞானியாக பரிணமித்த போது நிலவில் நீரை கண்டுபிடிக்க உதவியது. அதாவது ரஷ்யாவும், அமெரிக்காவும் சென்ற பாதையில் செல்லாமல், வேறுபாதையில் நாங்கள் சந்திரயான் - 1 செயற்கைக்கோளை இயக்கினோம். அவர்கள் பின்பற்றியது ‘நிலவில் இறங்கு நீரை தேடு’ எனும் திட்டம். ஆனால் நாம் பின்பற்றியது ‘நீரை தேடு, பின்னர் நிலவில் இறங்கு’ எனும் திட்டம். எனவேதான் ரோவரை அனுப்பாமல் வெறும் செயற்கைக்கோளை மட்டும் அனுப்பினோம்.

இது நிலவை மேலிருந்து கீழாக சுற்றி வந்தது. மற்ற நாடுகள் அனுப்பிய செயற்கைக்கோள்கள் நிலவை இடமிருந்து வலமாக சுற்றி வந்தது. மற்றவர்களை விட வித்தியாசமாக யோசித்ததால்தான் நம்மால் நிலவில் நீர் இருப்பதை கண்டுபிடிக்க முடிந்தது”

- இவை அனைத்தும் இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை சொன்னவை. சிங்கப்பூர் பெரியார் சமூக சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் பெரியார் விழா 2023, கடந்த 5 ஆம் தேதி மாலை உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய இஸ்ரோ விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரைதான் இப்படி பேசி இருக்கிறார். தன்னுடைய வளர்ச்சிக்கு பெரியாரின் கருத்துக்கள்தான் காரணம் என்று கூறியிருக்கிறார். பெரியாருக்கு கிடைத்த மிகப்பெரிய பாராட்டு இது.

**‘நானே சொன்னாலும் நம்பாதே. உனது புத்திக்குச் சரி என்று பட்டால் ஏற்றுக் கொள். இல்லாவிட்டால் விட்டுவிடு**’ என்று சொன்னவர் தந்தை பெரியார் அவர்கள். அவர் இந்த சமூகத்தின் மனதில் விதைக்க நினைத்தது **‘நாத்திகம்**’ என்று பலரும் தவறாகப் பொருள் கொள்கிறார்கள். **‘அறிவியல் சிந்தனையை’**த் தான் அவர் பரப்பினார். அறிவியல் மனப்பான்மையையே விதைத்தார். அனைத்தையும் கேள்வி கேள், விடை கண்டுபிடி என்பதுதான் அறிவியல் சிந்தனை ஆகும். தேடுதலின் இறுதியில், ஆய்வின் இறுதியில் சரியான ஒன்றைக் கண்டுபிடிப்பதுதான் அறிவியல் சிந்தனை ஆகும். வெறும் நம்பிக்கையை, கண்டுபிடிப்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றார் பெரியார். பகுத்தறிவும் - அறிவியலும் ஒரே நேர்கோட்டில் உள்ளவை ஆகும். **‘அறிவின் கூர்மைதான் பகுத்தறிவு’** என்றார் பெரியார். இது புரியாமல், ‘பகுத்தறிவு’ என்றாலே பயப்படுகிறார்கள் சிலர். பகுத்தறிவு, ஒழுக்கம், சீர்திருத்தம், அறிவியல் மனப்பான்மை, சுயமரியாதை போன்ற சமூகவியல் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு அணுகி ஆராயும் தன்மையே பெரியாரியம் ஆகும்.

குழந்தை பிறப்பது வரம் என்று நினைக்கப்பட்ட காலத்தில், **‘இது வரமல்ல, டெஸ்டியூப்பில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம்**’ என்று 1944 ஆம் ஆண்டு பேசியவர் பெரியார். ஒரு திருமண வீட்டில் பெரியார் பேசியதைக் கேட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், இதனை அப்படியே ஒரு கட்டுரையாக எழுதுகிறார். அதுதான், **‘இனி வரும் உலகம்**’ என்ற புத்தகம் ஆகும். இன்றைக்குப் பிரபலமாக இருக்கும் செல்போன், கம்ப்யூட்டர், வாக்மேன், வெப்கேமரா, டெஸ்ட் டியூப் பேபி, உணவு கேப்சூல்கள், குடும்பக் கட்டுப்பாடு... அனைத்தைப் பற்றியும் அந்த உரையில் குறிப்பிட்டு இருப்பார் பெரியார். **‘உலகம் மாறிக் கொண்டே இருக்கும், புதிய புதிய கண்டுபிடிப்புகள் வந்து கொண்டே இருக்கும்**’ என்பதுதான் அதன் உள்ளடக்கம் ஆகும்.

**“பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காக நாம் குறை கூறவில்லை. அவர்கள் காலத்தில் அவர்கள் செய்தது சரியாக இருக்கலாம். அவர்கள் காலத்தில் அவ்வளவுதான் முடிந்தது. ஆனால் இன்று மாறித்தான் ஆக வேண்டும்**” என்றார் தந்தை பெரியார்.

இவை அனைத்தையும் விட உச்சத்துக்குப் போய் இன்னொன்றையும் சொன்னார் பெரியார். **“ஒரு காலத்தில் ஈ.வெ.ராமசாமி என்ற ஒரு பிற்போக்குவாதி இருந்தான் - என்று சொல்லத்தக்க வகையில் இந்த நாடு முற்போக்காக மாற வேண்டும்**” என்று சொன்னார் பெரியார். அத்தகைய முற்போக்குச் சமுதாயமாக மாறுவோம்.

●●

## வங்கக் கடலையும் மூடியது பஞ்சாப் பயிர்க்கழிவு புகை!

புதுடெல்லி, நவ.10 –

பஞ்சாப் மாநிலத்தில் உச்ச நீதி மன்றத்தின் உத்தரவு, ஒன்றிய அரசின் கட்டுப்பாடு உள்ளிட்ட எதையும் மதிக்காமல், விவசாயிகள் தொடர்ந்து தங்கள் நிலங்களில் உள்ள பயிர்க்கழிவுகளை எரித்து வருகின்றனர். கடந்த மாதம் 29ம் தேதி, ஒரேநாளில் 1,068 நிலங்களில் பயிர்க்கழிவுகள் எரிக்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு முந்தைய ஆண்டுகளில் இதே காலக்கட்டத்தில் எரிக்கப்பட்டதை விட இது 740 சதவீதம் அதிகம்.

பஞ்சாப்பில் உருவாகும் பயிர்க்கழிவு எரிப்பு புகை, டெல்லி, என்சிஆரில் மட்டுமே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக நினைத்துக் கொண்டிருக்கும் நிலையில், அதன் தாக்கம் வங்கக் கடல் வரையில் நீண்டு இருக்கிறது என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது. அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் ‘வேர்ல்டுவிவ்யூ’ என்ற செயற்கைக்கோள் எடுத்துள்ள புகைப்படம் உறுதி செய்துள்ளது. வங்கக்கடலின் மீது பஞ்சாபில் இருந்து வரும் பயிர்க்கழிவு எரிப்பு புகை மூடி இருப்பதை இந்த புகைப்படம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.



வேலூர் அரசு பென்ட்லாண்ட் மருத்துவமனையில் ரூ.197.81 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பன்னோக்கு மருத்துவமனை கட்டுமானப் பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (09.11.2023) பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், தேவராஜ், மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில்

## பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு - கட்டுரைப்போட்டிகள்!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, நவ. 10-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில்...

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக ஐந்து முறை இருந்து மிகப்பெரிய வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிகோலியவர். அவருடைய நூற்றாண்டு விழாவை தமிழ்நாடு அரசு மிகப்பெ ரிய அளவில் கொண்டாடி வருகிறது. கழகத்தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளை நடத்தி பரிசளித்து ஊக்கப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.



கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி தலைப்புகள் :

1. வள்ளுவம் போற்றிய கலைஞர், 2. திராவிடத்தின் எழுச்சி கலைஞர்

3. இந்திய ஜனநாயகத்தில் கலைஞரின் பங்கு பேச்சுப் போட்டி தலைப்புகள் :(5 நிமிடங்கள்)

1. நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்!

2. மகளிர் மாண்பு காத்த கலைஞர்

3. கலைஞரும் சுயமரியாதையும் !

பள்ளி மாணவர்களுக்கு கட்டுரைப்போட்டி தலைப்புகள் :

1. கலைஞர் பெற்று தந்த உரிமைகள்

2. மாணவர் நலனில் கலைஞர்

3. கலைஞர் காத்த மனித நேயம் பேச்சுப்போட்டி தலைப்புகள் : (4 நிமிடங்கள்)

1. கலைஞர் ஆட்சியில் கல்வி புரட்சி

2. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்ட கலைஞர்

3. பெரியார், அண்ணா வழியில் கலைஞர்

இந்த பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பங்கேற்க ஒவ்வொரு போட்டிக்கும் இருவர் வீதம் தங்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். போட்டிகள் தொடர்பான அறிவிப்பையும், போஸ்டரையும் தங்கள் கல்வி நிறுவன அறிவிப்புப் பலகையில் ஒட்டி மாணவர் பார்வைக்கு வைக்குமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

பேச்சுப்போட்டியில் பள்ளி மாணவர்கள் 4 நிமிடங்களும், கல்லூரி மாணவர்கள் 5 நிமிடங்களும் பேசுதல் வேண்டும். ஒருவர் ஒரு போட்டியில் மட்டும் பங்கேற்க அனுமதியுண்டு.

போட்டிகளில் பங்கு பெறும் மாணவர்களின் பட்டியலை திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பள்ளி, கல்லூரிகள் மாவட்ட தி.மு.க. அலுவலகம், 57.திருக்கோவிலூர் ரோடு, சாரோன், திருவண்ணாமலை. அலைபேசி. 9486173999 என்ற முகவரிக்கும்,

வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பள்ளி, கல்லூரிகள் மாவட்ட தி.மு.க. அலுவலகம், புதிய பேருந்து நிலைய சாலை, வந்தவாசி நகரம், தி.மா 604408. செல்.96559 97666 என்ற முகவரிக்கு மாணவர்கள் பட்டியலை, 25.11.2023 சனிக்கிழமைக்குள் அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்கிறோம்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி நடைபெறும் இடம் மற்றும் நாள் குறித்து விரைவில் பள்ளி, கல்லூரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.

மாவட்ட அளவில் முதல் மூன்று இடம் பெறும் மாணவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். பின்னர் மண்டல வாரியாக போட்டிகள் நடைபெறும். இறுதியா மாநில அளவில் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டிகள் நடைபெறும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை முன்னிலையில்

## 132 ‘அ’ வட்டச்செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா இல்ல மணவிழா!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்- மு.க.தமிழரசு - அமைச்சர்கள் வாழ்த்து!

சென்னை, நவ. 10 -

சென்னை கோடம்பாக்கம் ஏ.பாலையா - ஹேமாவதி ஆகியோரது புதல்வர் பா.முரளி, முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்மணி - பூபதி அம்மாள் ஆகியோரின் மகள் வழி பேத்தியும், வட்டச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா (எ) பாஸ்கர் - கார்த்திகா (மாமன்ற உறுப்பினர்) ஆகியோரது புதல்வி பி.எழிலரசி ஆகியோரது திருமணம் இன்று (10.11.2023) - வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வடபழனி முருகன் கோவிலில் நடைபெறுகிறது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் மு.க.தமிழரசு - மோகனா தழிழரசு ஆகியோர் தலைமையேற்று மணவிழாவை நடத்தி வைக்கின்றனர்.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி இன்று (10.1.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணி அளவில் கோடம்பாக்கம் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் ந. இராமலிங்கம், கழக வர்த்தகர் அணி ஐ.கென்னடி, நந்தனம் கி.மதி, எஸ்.முரளி, எம்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, கே.என். நேரு, க.பொன்முடி, துணைப் பொதுச் செயலாளர்கள் கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ.இராசா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி.,

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி மற்றும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தயாநிதி மாறன் எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி,

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மேயர் பிரியா ராஜன், முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.



தாயகம் கவி, எம்.கே. மோகன், டாக்டர் நா.எழிலன், காரம்பாக்கம் கணபதி, ஐ.பரந்தாமன், ஏ.எம். பி.பிரபாகர்ராஜா, வீட்டு வசதி கழக தலைவர் பூச்சி முருகன், எம்.எல்.ஏ.க்கள் ஆர்.டி.சேகர், ச.அரவிந்த் ரமேஷ், ஜோசப் சாமுவேல், தலைமை நிலையச் செயலாளர் கு.க.செல்வம், கோ.சு. மணி, எஸ்.மோகன், க.தனசேகரன், ராஜா அன்பழகன், அண்ணா அறிவாலயம் க.பத்மராஜன், என். ஜெயக்குமார், வழக்கறிஞர் கே. மறைமலை, வ.செல்வகுமார், எஸ். மதன்மோகன், ஏ.ஆர்.பி. எம்.காமராஜ், வினோத் வேலாயுதம், மா.பா.அன்புதுரை, இரா.துரைராஜ், ச. பரமசிவம், வே.ராஜன், கே.கண்ணன், மு.இராசா, அரிமா சு.சேகர், ஆ.சந்திரசேகர், கோடம்பாக்கம் மு.சத்யா, வேதா, கே.மலர், என்.அன்பழகன்,

வி.பி.கலைராஜன், காசி முத்துமாணிக்கம், அகஸ்டின்பாபு, ஆர்.என்.துரை, மந்தை வெளி பாபு, செல்வி சௌந்தர்ராஜன், எஸ்.குணசேகரன், ராணி ரவிச்சந்திரன், வி.எஸ்.ராஜ், வி.என். ராஜன், எம்.டி.ஆர்.நாதன், ஜெ.நற்குணநாதன், ஏ.டி. முருகன், சுரேஷ்குமார், எம்.ஸ்ரீதரன், உ.துரைராஜ், பி.எஸ்.முருகன், பொன். லோகு, செந்தமிழச்சி சசிகுமார், ஷியாம், எம்.சீனிவாசன், சைதை சாதிக், ப.பிரகாஷ், வி.ஆர்.விஜய், ச. அசோக்குமார், எம்.டி.ஆர். சாரதி, சு.வில்லவன், ஆர். சசிகுமார், உ.நரேஷ், க. முருகன், கே.மதன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்..



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு 2300 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் பி.கே. சேகர் பாபு, தயாநிதி மாறன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## தூய்மைப் பணியாளர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்க நடவடிக்கை!

# எந்த மதத்தையும் இழிவு படுத்தவில்லை! கொள்கையைத்தான் பேசினேன்!

## ராஜா அண்ணாமலை மன்றத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நல உதவிகள் வழங்கி உரை!

சென்னை, நவ.10-

**தூய்மைப் பணியாளர்களையும், அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் தொழில் முனைவோர்களாக உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், எந்த மதத்தையும் இழிவு படுத்தவில்லை கொள்கையைத்தான் பேசினேன்; அதில் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன் என்றும் ராஜா அண்ணாமலை மன்றத்தில் நல உதவிகளை வழங்கி பேசுகையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்டத்தின் 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் அமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றினார். அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:



"கலைஞரின் நூற்றாண்டை முன்னிட்டு இவ்வளவு சிறப்பான ஒரு நிகழ்ச்சி. மாவட்டக் கழக நிர்வாகிகள் மட்டுமல்லாமல், தூய்மைப் பணியாளர்கள், குடிநீர் வடிகால் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரிய ஊழியர்கள் எனக் கிட்டத்தட்ட 2,300 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதிலே மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

அமைச்சர் சேகர்பாபு அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். நான் ஏற்கனவே பலமுறை சொன்னதுதான். என்னை வைத்து குறைந்தது மாதத்துக்கு இரண்டு நிகழ்ச்சிகளையாவது அவருடைய மாவட்டத்தில் நடத்தி விடுவார். அதுவும் எப்படியென்றால், ரொம்ப சாமர்த்தியமாக, ஒரு நிகழ்ச்சி நடக்கும்போதே அடுத்த நிகழ்ச்சிக்கான தேதியும் அந்த நிகழ்ச்சியிலேயே வாங்கி விடுவார்.

இதற்கிடையில் நடுவில் நான் மறந்திருக்கும் போது இன்னொரு தேதியும் என்னிடம் வீட்டில் வந்து வாங்கி விடுவார். இன்னும் சொல்ல போனால் என்னுடைய டைரி இப்போது அவர் கையில்தான் இருக்கிறது. எந்த மாவட்டத்தில் இருந்து எந்த மாவட்டச் செயலாளர் தேதி கேட்டாலும், முதலில் சேகர்பாபு அண்ணனுக்குத்தான் நான் போன் பண்ணுவேன். `அண்ணன் அந்தத் தேதியில் ஏதாவது நிகழ்ச்சி வைத்திருக்கிறீர்களா' என்று கேட்பேன். கலைஞருடைய நூற்றாண்டில் நூறு நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்று இலக்கு, இது 58வது நிகழ்ச்சி. இதில் 20 நிகழ்ச்சிகளிலாவது நான் கலந்து கொண்டிருப்பேன்.

அந்த அளவிற்கு எதையும் எடுத்து செய்வார். தலைவர் ஏற்கனவே பலமுறை பாராட்டி இருக்கிறார், `சேகர் பாபு இல்லை, செயல் பாபு' என்று. நானும் பெருமையாகச் சொல்லி இருக்கிறேன். நீங்கள் வெறும் செயல் பாபு கிடையாது நீங்கள் `சூப்பர் செயல்பாபு' என்று. ஒரு நிகழ்ச்சி நடத்துவதாக இருந்தாலும் சரி, எல்லாவற்றிலும் கண்டிப்பாக இருப்பதிலும் சரி, நான் சொல்வது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். அவருக்கும் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

### கண்டிப்பாகவும், பாசமாகவும் இருப்பார் சேகர்பாபு

ரொம்பக் கண்டிப்பாக இருப்பார். எந்த அளவுக்குக் கண்டிப்பாக இருப்பாரோ அந்த அளவிற்குப் பாசமாகவும் இருப்பார். இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடத்துவதில் நலத்திட்ட உதவிகள் கொடுப்பதில், அவரை அடித்துக் கொள்வதற்கு ஆளே கிடையாது. அவர் முழு நேர அரசியல்வாதி. நான் பலமுறை அவரிடம் கிண்டலாகக் கூட சொல்லுவேன். நீங்கள் உண்மையாகச் சொல்லுங்கள், நீங்கள் ஒருத்தர்தானா இல்லை, உங்களைப் போல உருவ ஒற்றுமை உள்ள இன்னொருத்தர் உங்களுடைய அண்ணன் தம்பியோ யாராவது இருக்காங்களா என்று நான் பலமுறை அவரிடம் கேட்டிருக்கிறேன்.

எனக்கு இன்னும் அந்த சந்தேகம் உண்டு. ஏனென்றால், இப்போது இங்கு இருப்பார். அரை மணி நேரத்தில் வேறொரு நிகழ்ச்சியில் இருப்பார். சாயங்காலம் தலைவருடன் கொளத்தூரில் இருப்பார். இரவு என்னிடம் வந்து தேதி கேட்பார். அந்தளவிற்கு ஒரு கடின உழைப்பாளி. நமக்கெல்லாம் எடுத்துக்காட்டாக அவர் தலைவரைப் பார்த்து, தலைவர் எந்த அளவிற்கு உழைக்கிறாரோ அந்தளவிற்கு உழைக்க வேண்டும் என்று இந்த இயக்கத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கிறார்.

இந்தக் கிழக்கு மாவட்டம் தி.மு.க.வின் கோட்டையாக இருக்கிறது என்றால் அதற்கு சேகர்பாபு தான் காரணம். நான் அவரைப் பாராட்டுகிறேன் என்றால், அவருடன் சேர்த்து உங்களையும் நான் பாராட்டிக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், அவர் இந்த அளவிற்கு ஓடி ஓடி உழைக்கிறார் என்றால், அதற்கு ஈடு கொடுக்கின்ற வகையில், நீங்களும் உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். தலைவர் எதிர்பார்ப்பதை அவர் செய்துகொண்டிருக்கிறார். அவர் எதிர்பார்ப்பதை நீங்கள் களத்தில் இறங்கி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

இன்னும் சொல்லபோனால், என்னைப் பெருமையாகச் சொல்வார்கள் `சேப்பாக்கத்தின் செல்லப்பிள்ளை' என்ற பட்டப் பெயர் எல்லாம் வைத்து கூப்பிடுவார்கள். நிறைய நிகழ்ச்சிகள் கலந்துகொள்வேன். ஆனால், சேப்பாக்கம் திருவல்லிக்கேணியைவிட அதிகமாக நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்றால், அது துறைமுகம் தான் இந்தக் கிழக்கு மாவட்டம்தான்.

### 2 ஆண்டுகளில் 10 நிகழ்ச்சிகள்!

இந்த அரங்கத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் கிட்டத்தட்ட 10 நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருப்பேன். அப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தக்கூடிய சேகர்பாபு அவர்களுக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்குக் கலைஞருடைய நூற்றாண்டில் நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி மிகவும் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சி. கழகத்தை வலிமையாக வைத்திருக்கக்கூடிய கழக நிர்வாகிகளுக்கும் நம்முடைய சென்னையை அழகாகப் பராமரிக்கக் கூடிய தூய்மைப் பணியாளர்களுக்கும் சேர்த்து நலத்திட்ட உதவிகளை கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இங்கே இருக்கக்கூடிய கழக நிர்வாகிகள் உங்கள் ஒவ்வொருவருடைய உழைப்புதான் 2019ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வட சென்னை மற்றும் மத்திய சென்னை தொகுதிகளில் கழகத்திற்கு மிகப் பெரிய வெற்றியைத் தேடி கொடுத்தது. அதேபோல் சட்டமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றோம். கழகத் தலைவர் அவர்கள் ஆட்சி அமைத்தார்கள் என்றால், அதற்கும் கழக நிர்வாகிகளாகிய நீங்கள்தான் காரணம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், உள்ளாட்சித் தேர்தலில் நம்முடைய மேயரை தந்ததும் இந்த கிழக்கு மாவட்டம்தான்.

அதேபோல் வருகின்ற 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியைக் கொடுக்கப் போவதும் நீங்கள்தான். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் மட்டும் கூடுதலாகச் சிரிக்கிறார். உங்களுடைய இந்த அயராது உழைப்புதான் நமது கழகத்தை 75 ஆண்டு காலமாகத் துடிப்புடன் நடத்திக்கொண்டிருக்கிறது.

குடிநீர் வடிகால் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய ஊழியர்களுக்கும் நலத்திட்டங்களை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்குச் சென்னை சென்னையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் தூய்மைப் பணியாளர்களும், ஊழியர்களும்தான்.

நீங்கள் வெறும் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமல்ல, மனதளவிலும் மிக மிகத் தூய்மையான உள்ளம் படைத்தவர்கள். நம்முடைய சென்னை மாநகரம் நிம்மதியாக மூச்சு விடுகிறது என்றால், சுத்தமான காற்றை சுவாசிக்கிறது என்றால், அதற்குக் காரணம் தூய்மைப் பணியாளராகிய நீங்கள்தான்.

நான் அடிக்கடி வெளியூர் பயணம் முடித்துவிட்டு, அதிகாலை சென்னை திரும்பும்போது சாலையோரங்களில் முதலில் சந்திக்கிறது அவர்களைத் தான். இன்னும் சொல்லப்போனால், மாநகரத்திலேயே முதலில் வேலைக்குப் போவது யார் என்றால், தூய்மைப் பணியாளார்கள்தான்.

### இரவு பகலாக உழைக்கும் தூய்மைப் பணியாளர்கள்

காலையில் இரண்டு மணிக்கு மூணு மணிக்கெல்லாம் வேலைக்கு வந்து நகரை சுத்தம் செய்துவிட்டுப் போய் விடுவீர்கள். எந்தப் பிரதிபலனும் எதிர்பார்க்காமல் மக்கள் நலனுக்காக வெயில் மழை பார்க்காமல், இரவு பகலாக உழைக்கிறவர்கள் என்றால், அது தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான். உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

ஒரு குழந்தை காலையில் வீட்டை விட்டு வெளியே போய் நண்பர்களுடன் விளையாடி விட்டு அழுக்கோடும் வியர்வையோடும் வீட்டுக்கு வரும். வீட்டுக்கு வந்தவுடன் அம்மா திட்ட மாட்டார்கள். அந்தக் குழந்தையைக் குளிக்கச் செய்து சாப்பாடு கொடுத்துப் பார்த்துக்கொள்வார்கள். அது மாதிரி தான் சென்னை என்ற குழந்தையைப் பார்த்துக்கொள்கின்ற தாய் தந்தையார் என்றால், இந்தத் தூய்மைப் பணியாளர்கள்தான்.

புயல், மழை, வெள்ளம் போன்ற பேரிடர் காலங்களிலும் இன்னும் சொல்லப்போனால், கொரோனா போன்ற பெரும் தொற்றுக் காலங்களிலும் நீங்கள் ஆற்றிய பணிக்கு நம் தமிழ்ச் சமுதாயம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், கொரோனா பெருந்தொற்றுக்காலம், லாக்டவுன் காலம் எல்லாவற்றையும் அடைத்துவிட்டார்கள். அனைத்தும் மூடப்பட்டு இருந்தது. ஆனால், களத்தில் இறங்கி மக்களோடு மக்களாக நின்று, நலத்திட்ட உதவி கொடுத்தது யாரென்றால், இரண்டே பேர்தான் ஒருவர் தி.மு.க.வின் நிர்வாகிகளான நீங்கள், இன்னொருவர் தூய்மைப் பணியாளர்கள்தான். அப்படிப்பட்ட தூய்மைப் பணியாளர்களுக்குத்தான் பல்வேறு திட்டங்களை நம்முடைய கழக அரசு அறிவித்துச் செயல்படுத்தி வருகின்றது.

துப்புரவுப் பணியாளர் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் மூலம் சுமார் 4,000 பேருக்கு நிதியுதவி மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொள்ள, கழக அரசு நிதி வழங்கி வருகிறது.

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை மாற்றப்பட்டு, அதற்கான தனிச் சட்டத்தை ஏற்றியது நம்முடைய திராவிட மாடல் அரசு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 19,000 தூய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வுக்காகக் கழக அரசு 20 கோடியை ஒதுக்கியதும் உங்களுக்குத் தெரியும்.

ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய தலைவர் அவர்கள் கொரோனா காலத்தில் தூய்மைப் பணியாளர்களை முன் களப்பணியாளர்கள் என்று அறிவித்து, நம்முடைய திராவிட மாடல் அரசு அவர்களுக்கு நிதி உதவி வழங்கியது.

மேலும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, வீடுகள் கட்டிக் கொடுப்பதுடன் அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் முதலமைச்சர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்தார்கள்.

### தொழில் முனைவோர்களாக உருவாக்க நடவடிக்கை

அண்மையில்கூட தூய்மைப் பணியாளர் நல வாரியத்தைச் சேர்ந்த 500 பேருக்கு ரூபாய் 55 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் ஏற்ற மிகு ஏழு திட்டங்களுக்குச் சென்னை மாநகரப் பகுதிகளில் கழிவுநீர் அகற்றும் பணிகளை நவீனப்படுத்தித் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களைத் தொழில் முனைவோர்களாக உருவாக்க நம்முடைய கழக அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இப்படிப் பல்வேறு திட்டங்கள் ஒவ்வொரு பகுதி மக்களையும், தலைவர் அவர்கள் பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார்கள். கழக நிர்வாகிகள் நீங்கள் அத்தனை பேரும் இங்கு வந்திருக்கிறீர்கள். எழுச்சியுடன் வந்திருக்கிறீர்கள்.

நான்கே நான்கு திட்டங்கள். இந்த இரண்டரை வருட ஆட்சிக் காலத்தில் நான்கு திட்டங்களை மட்டும் நீங்கள் அத்தனை பேரும் மனதில் பதிய வைத்து தொடர்ந்து உங்களுக்குக் கிடைக்கக்கூடிய அத்தனை வாய்ப்புகளிலும் இந்தத் திட்டத்தைப் பற்றி உங்களுடைய உற்றார் உறவினர்கள் இடத்தில், உங்கள் நண்பர்களிடத்தில் தொடர்ந்து வலியுறுத்தி ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

முதல் திட்டம் நம்முடைய ஆட்சி அமைந்து, தலைவர் போட்ட முதல் கையெழுத்து. மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து பயணம். தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி. இதன்மூலம் ஒவ்வொரு மகளிரும் கிட்டத்தட்ட மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய். பிங்க் பஸ். நம் வெளியூரிலெல்லாம் இதை என்னவென்று சொல்கிறார்கள் தெரியுமா? `ஸ்டாலின் பஸ்' என தலைவர் பெயரைச் சொல்லி அழைக்கிறார்கள்.

புதுமைப் பெண் திட்டம். இது தேர்தல் அறிக்கையில் சொல்லப்படவில்லை. அரசுப் பள்ளியில் படித்து, உயர் கல்வி படிக்க வேண்டுமென்றால், அந்தப் பெண் எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும், மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் என்ற புதுமைப் பெண் திட்டம்.

அதேபோல் இன்னொரு திட்டம். இதுவும் தேர்தல் அறிக்கையில் சொல்லாத திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இங்கே தூய்மைப் பணியாளர்கள், காலையில் வேலைக்குச் செல்லக்கூடிய மகளிர் எல்லாம் வந்திருக்கிறார்கள். முன்பெல்லாம் குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு வருத்தத்திலேயே இருப்பார்கள். காலை 8 மணிக்கு எழுந்து, ஸ்கூலுக்கு அனுப்ப வேண்டும். சாப்பிடாமல் போயிருப்பானே, பசியுடன் போய் உட்கார்ந்து இருப்பானே. அதற்குள் வகுப்பில் படித்தானோ இல்லையோ என சின்ன ஒரு சோகம், வருத்தம் இருக்கும்.

### 31 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்

ஆனால், இப்போது ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அத்தனை குழந்தைகளுக்கும் ஸ்கூலுக்குப் போனால் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுகின்ற ஒரு திட்டம். 17 ஆயிரம் அரசு பள்ளிகளில் 31 லட்சம் குழந்தைகள் இத்திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

இப்போது ஒவ்வொரு தாயும் தந்தையும் பிள்ளைகளை தைரியமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறார்கள். நம்முடைய குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதற்கு நம்முடைய முதலமைச்சர் இருக்கிறார். நம்முடைய கழக அரசு பாத்துக்கொள்ளும். எந்த ஒரு கவலையும் இல்லை. பள்ளிக்குச் சென்றான் என்றால் சாப்பிட்டுப் படிக்கப் போவான் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

இப்போது பக்கத்து மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து எப்படி இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறீர்கள் பார்த்துச்சென்று அவர்களுடைய மாநிலத்தில் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். இது தேர்தல் அறிக்கையில் இல்லாத திட்டம் சொல்லாத வாக்குறுதியைச் செய்து இருக்கிறோம்.

அடுத்து இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். இது தேர்தல் வாக்குறுதியில் சொன்னதுதான். ஆனால், கொடுப்பதற்கு இரண்டு வருடம் ஆகிவிட்டது. உங்களுக்கே தெரியும் கழகம் ஆட்சி பொறுப்பேற்கும்போது நிதி நிலைமை எப்படி இருந்தது என்று.

இருந்தாலும், இந்த முறை கலைஞருடைய நூற்றாண்டில், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம்' மாதம் ஆயிரம் ரூபாய் இரண்டு மாதங்களாக கொடுத்து வருகிறோம்.

முதல் கட்டமாக ஒரு கோடியே 6 லட்சத்து 58 ஆயிரம் மகளிர் பயன் பெற்று இருந்தார்கள். நாளைக்கு இரண்டாவது கட்டமாக பரிசீலனையில் இருந்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு இப்போது புதிதாகக் கிட்டத்தட்ட 7 லட்சம் மகளிர் அந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, சென்னையில் தலைவர் கொடுக்கப் போகிறார்கள். இப்போது இந்தத் திட்டத்தில் பயனாளிகள் எவ்வளவு தெரியுமா? ஒரு கோடியே 11 லட்சத்து 60 ஆயிரம் மகளிர்.

இந்த நான்கு திட்டத்தைக் கழக நிர்வாகிகள் நீங்கள் பொதுமக்களிடம் கொண்டு போய் பேசிக் கொண்டே இருக்க வேண்டும். எப்போது எல்லாம் இந்த வாய்ப்பு கிடைக்குதோ அப்போதெல்லாம் நீங்கள் பேச வேண்டும்.

### நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி தேடித்தாரீர்

எப்படி சட்டமன்றத் தேர்தலில் ஒரு மிகப்பெரிய வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்தீர்களோ, எப்படி உள்ளாட்சித் தேர்தலில் வரலாறு காணாத வெற்றியை கொடுத்தீர்களோ, அதே போல நாடாளுமன்ற தேர்தலில் அந்த வெற்றியை கொடுப்பீர்கள், தேடித் தருவீர்கள் அதற்காகத்தான் நம் தலைவர் அவர்கள் இரவு பகல் பார்க்காமல் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்.

இரண்டு நாள் உடம்பு சரியில்லை ஓய்வில் இருந்தார். நாளைக்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்வார். அதற்கெல்லாம் தலைவர் இவ்வளவு சீக்கிரம் வருகிறார் என்றால், அதற்கெல்லாம் உந்து சக்தியாக இருக்கக்கூடிய நீங்கள்தான் இயக்கத்தின் நிர்வாகிகளாகிய நீங்கள் மட்டும்தான் காரணம்.

எனவே, இந்த வாய்ப்பை அளித்த அண்ணன் சேகர் பாபு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை முடித்துவிட்டு, அடுத்துதான் என் தொகுதிக்குப் போகப் போகிறேன். இந்த மாவட்டத்துக்கு முடித்துக் கொடுத்து விட்டு அவரிடம் அனுமதி வாங்கிட்டுத்தான் நான் என் தொகுதிக்குப் போகிறேன்.

'திராவிட மாடல் அரசு' என்றால் என்ன என்று சிலர் கேட்கிறார்கள். வாகனத்தில் நானும் தயாநிதி அண்ணாவும் ஒன்றாகத்தான் வந்தோம். வரவேற்பு அளித்தவர்களில் ஒரு பக்கம் தாய்மார்களெல்லாம், 'தம்பி தீபாவளி வாழ்த்துகள், தீபாவளி வாழ்த்துகள் என்று சொன்னார்கள். நானும், 'வாழ்த்துகள், வாழ்த்துகள்' என்று சொன்னேன். இன்னொரு பக்கம் நம்முடைய இளைஞர் அணி தம்பிமார்கள் எல்லாம் பெரியார் வாழ்க, பெரியார் வாழ்க என்று சொன்னார்கள். இதுதான் திராவிட மாடல் அரசு. அனைவருக்கும் எல்லாம் என்பது தான் திராவிட மாடல் அரசு.

சமீபத்தில், இரண்டு மாதங்களுக்கு முன்பு மிகப்பெரிய சர்ச்சை ஒன்று ஏற்பட்டது. காமராஜர் அரங்கத்தில் நான் பேசிவிட்டு போயிருந்தால் கூட யாருக்குமே தெரிந்திருக்காது. ஆனால், நான் பேசாததை யெல்லாம் பேசினேன் என்று சொல்லி, அதைப் பெரிதாக்கி, பொய்யாக்கி, பூதாகரமாக்கி விட்டனர். நானாவது பேசினேன், என் மேல் வழக்கு வந்துவிட்டது. சேகர்பாபு அண்ணன் அன்று உட்கார்ந்து வேடிக்கை பார்த்தார். இப்போது அவர் மீதும் வழக்கு இருக்கிறது.

என்னை வந்து மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், நீங்க என்ன பண்ணினாலும் நான் மன்னிப்பு கேட்கமாட்டேன். நான் பேசியது பேசியதுதான் சட்டப்படி சந்திப்போம். நீதிமன்றத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

நாங்கள் எந்த மதத்தையும் இழிவுபடுத்திப் பேசவே இல்லை. சமூக நீதி வேண்டும் அனைவரும் சமம் என்றுதான் பேசினேன். எனவே, நான் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மகன், கலைஞருடைய பேரன். பேசினால், பேசியதுதான். கொள்கையைத்தான் பேசி இருக்கிறேன், பின் வாங்க மாட்டேன் எனச் சொல்லிவிட்டேன். ஏதாவதென்றால், நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வந்திருக்கும் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். சேகர் பாபு அண்ணன் அவர்களுக்கு என்னுடைய நன்றி. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைத்து நிர்வாகிகளுக்கும் உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

அமைச்சரும், மாவட்ட செயலாளருமான பி.கே.சேகர்பாபு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரங்கநாதன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.



தீப ஒளித் திருநாளை முன்னிட்டு திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி கழக நிர்வாகிகளுக்கு அமைச்சர் பி.கே. சேகர் பாபு பரிசுகள் வழங்கினார். தாயகம் கவி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அரசுப் பள்ளி மாணவர்களோடு ‘சப்பான் தமிழ்ச் சங்கம்’ அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அங்குள்ள தமிழர்கள் மற்றும் மாணவர்களோடு கலந்துரையாடினார். தொடர்ந்து தென்கொரிய நாட்டிற்குச் சென்று தென்கொரிய அரசுப் பள்ளியை மாணவர்களோடு இணைந்து பார்வையிட்டார். ‘தென்கொரிய தமிழ்ச் சங்கம்’ அளித்த வரவேற்பு நிகழ்விலும் கலந்துகொண்டு ‘தென்கொரியா தமிழ்நாடு’ இடையேயான வரலாற்று நிகழ்வுகள் மற்றும் நட்புறவுகள் பற்றி சிறப்புரையாற்றினார்.

### வேடசந்தூர் தொகுதி, மம்மானி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோரிடம்

# முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.5 லட்சத்திற்கான காசோலை!

## அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கி ஆறுதல் தெரிவித்தார்!

திண்டுக்கல், நவ.10 -

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேறி பட்டி ஊராட்சி, மம்மானி கிராமத்தில் கடந்த 05.11.2023 அன்று மின்சாரம் தாக்கி குழந்தைகள் சு.குமார், அழகுமீனா இறந்தனர். அவர்களது பெற்றோரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.5.00 லட்சத்திற்கான காசோலையை உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேரில் சென்று மேலும் அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மொ.நா. பூங்கொடி, வடசென்னை சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.

உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்ததாவது: -

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேறிபட்டி ஊராட்சி, மம்மானி கிராமத்தில் சுந்தரம் என்பவர் வீட்டில் கடந்த 05.11.2023 அன்று அவருடைய மகன் சிறுவன் சு.குமார் (வயது 6) வீட்டில் தகர கதவை திறக்க முயன்றபோது, மின்கசிவு காரணமாக விபத்து ஏற்பட்டது. அதைப்பார்த்த சிறுவனின் சகோதரி அழகுமீனா (வயது 16) உடனடியாக அந்த சிறுவனை காப்பாற்ற முயன்றார். அப்போது, சிறுமி மீதும் மின்சாரம் பாய்ந்தது. இந்த சம்பவத்தில் இரண்டு பேரும் பரிதாபமாக இறந்தனர்.

இந்த சம்பவம் குறித்து அறிந்தவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆழ்ந்த இரங்கலையும், குழந்தைகளை இழந்து வாடும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் தெரிவித்தார். மேலும், அந்த குடும்பத்தினரின் எதிர்கால நலன் கருதி முதலமைச்சரின் பொது நிவாரண நிதியி லிருந்து ரூ.5.00 இலட்சம் வழங்க உத்தரவிட்டார்.

அதன்படி, மின்சாரம் தாக்கி இறந்த சிறுவன் மற்றும் சிறுமியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.5.00 இலட்சத்திற்கான காசோலை 08.11.2023 அன்று வழங்கப்பட்டது.

மேலும், மாவட்டக் கழகத்தின் சார்பில் ரூ.1.00 இலட்சம் மற்றும் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் சார்பில் ரூ.25,000 ஆகிய தொகை ரொக்கமாக வழங்கப்பட்டது.

மேலும், மிகவும் ஏழ்மையான அந்த குடும்பத்தினருக்கு பாதுகாப்பான வீடு வழங்கும் வகையில், உடனடியாக 3 சென்ட் நிலம் தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அங்கு அரசின் திட்டங்களின் கீழ், விலையில்லா வீடு கட்டிக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு சிறுவன் 9ஆம் வகுப்பு படித்து வருகிறார். அவரை ஒட்டன்சத்திரத்தில் உள்ள குருகுலத்தில் சேர்ந்து தொடர்ந்து படிக்க வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரை நன்கு படிக்க வைத்து, போட்டித் தேர்வுக்கு தயார்படுத்தி வேலை வாய்ப்பை பெற்றுத் தரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இரண்டு குழந்தைகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன், என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், வீ.பாஸ்கரன், வடமதுரை ஒன்றிய செயலாளர் சுப்பையன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### ப.தாயகம்கவி எம்.எல்.ஏ ஏற்பாட்டில்

# தீப ஒளி திருநாளை முன்னிட்டு கழக நிர்வாகிகள் - பாகமுகவர்களுக்கு பரிசு!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு வழங்கினார்!

சென்னை,நவ.10-

சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம் கவி ஏற்பாட்டில் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள பகுதி கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் , அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், மற்றும் பாக முகவர்கள் உள்ளிட்டவர்களுக்கு வருகின்ற தீப ஒளி திருநாளை முன்னிட்டு நேற்று (9.11 .2023) டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் புளியந்தோப்பு காவல்நிலையம் அருகில் அமைந்துள்ள திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் தீப ஒளி திருநாள் பரிசாக பட்டாசு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

மேலும் இந்நிகழ்வில் சென்னை மாநகர மேயர் பிரியாராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி,மண்டல குழு தலைவர் சரிதாமகேஷ்குமார், பகுதிகழக செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன் , எம்.சாமிக்கண்ணு, ஆசாத், புனிதவதி எத்திராஜ், டி. லோகேஷ், வழக்கறிஞர் துலுக்காணம்,லயன் உதய சங்கர், பெரோஸ்கான், பெரம்பூர்மகேஷ், ராஜ்முகமது, வழக்கறிஞர் எம்.சரவணன், அம்பேத்வளவன், ரமணிலோகேஷ், தமிழ்செல்விசசிகுமார், வட்ட கழக செயலாளர்கள் மா.ருத்ரமூர்த்தி,பரிமளா சுரேஷ், எம்.ஏ. டீக்கா, எம்.இஸட். அபாய், எம். தமீம்பாய், பொல்லு டி.சுரேஷ்குமார்,எஸ்.புஷ்பராஜ்,வழக்கறிஞர் கிருஷ்ணகுமார், சன். டிவிவெங்கடேசன்,எஸ். சசிகுமார், எஸ்.வெங்கடேசன், வடக்கு பகுதிகழக நிர்வாகிகள் தில்லை கதிரவன் பெரம்பூர் ஆர். ராஜன் புல்லட் கி. ரமேஷ், புவனவதி, கிணார் ஆறுமுகம், தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் கோவிந்தன் , த.கருணாநிதி, சுகுமார்,வனஜா சண்முகம், அ.கருணாநிதி

மாவட்ட பிரதிநிதிகள்,விஜயகுமார், ஸ்வீட் பாபு ,மதுரை, பிரகாசம், சீனிவாசன், அண்ணாதுரை, எம். துரைசாமி ,ஜெகநாதன் ,பாபு மனோகர், பி.சதீஷ், ராஜி, இளஞ்செழியன், நாமதேவன், ராஜராஜன் , புருஷோத்தமன் , சுப்பிரமணி, தாமரைச்செல்வன், கதிரவன், நாகலிங்கம், நெல்லை மா.முத்தையா,எச்.திவாகர்,

உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தொகுதியில் அனைத்து பாகமுகவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டாசு மற்றும் இனிப்புகளை பெற்றுச் சென்றனர்.

# வில்லியனூர் தொகுதி பயனாளிகளுக்கு உதவித் தொகை அட்டைகள்!

## புதுவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார் !

வில்லியனூர், நவ.10-

வில்லியனூர் தொகுதியைச் சேர்ந்த முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர்,முதிர்கன்னிகள், திருநங்கை என 100 பயனாளிகளுக்கு அரசின் மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான அடையாள அட்டையை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்.

புதுச்சேரி வில்லியனூர் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவாவின் சீரிய முயற்சியால் சாலை, குடிநீர், மின்துறை சார்ந்த பணிகள், உதவித்தொகை உள்ளிட்ட அரசு சார்ந்த மக்கள் நலத்திட்டங்கள் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் புதுச்சேரி அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மூலம் வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், முதிர்கன்னிகள், திருநங்கைகள் ஆகியோருக்கு அரசின் மாதாந்திர உதவித் தொகை ஆணை வழங்கும் நிகழ்ச்சி வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கலந்து கொண்டு 100 பயனாளிகளுக்கு உதவித்தொகை பெறுவதற்கான அரசின் அடையாள அட்டைகளை வழங்கினார்.

இதில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இணை இயக்குநர் அமுதா, தொகுதி பொறுப்பாளர் சுமதி மற்றும் தி.மு.க. தொகுதி செயலாளர் மணிகண்டன், மாநில இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் பழனிசாமி, வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் செல்வநாதன், விவசாய அணி அமைப்பாளர் குலசேகரன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் சரவணன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலிமுல்லா, கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் தேசிகன், ஆதிதிராவிடர் அணி துணைத் தலைவர் கதிரவன், ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் காளி, தொகுதி துணைச் செயலாளர்கள் ஜெகன் மோகன், ஹரி கிருஷ்ணன், அங்காளன், ரபீக், ஏழுமலை, மிலிட்டரி முருகன், திலகர், காளிதாஸ், ஜனா, சுப்பிரமணி, ரகு, வெங்கடேசன், செல்வநாயகம், பாலகுரு, முருகேசன், முருகையன், பாலு, அன்பு, முஜி, சந்தோஷ், அன்பு நிதி, நடராஜன், முத்து, லட்சுமணன், ராஜேந்திரன், தயாளன், கோதண்டம் ஆகியோர்கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறைமுகம் நா. இராமதாஸ்

### நவம்பர் 10 (2016)



துறைமுகம் பகுதி வட்டாரத்தின் ஆரம்ப கால கழகத் தோழர்.

கழகத்திற்கு, தொடக்க காலத்தில், பகுதிச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டபோது, துறைமுகம் பகுதிக் கழகத்தின் செயலாளராக தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர் இவர்.

கழக மூத்த தலைவர்களுடனும், முன்னோடிகளுடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.

ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனை ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# அரியலூர்மாவட்டஅவைத்தலைவர்சிவ.மாணிக்கம்மறைவு!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்!

அரியலூர், நவ, 10-

அரியலூர் மாவட்ட கழக அவைத்தலைவர் சிவ. மாணிக்கம் மறைவு எய்தினார். தகவலறிந்த மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பளிங்காநத்தம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அன்னாரின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இதனை தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டக் கழக செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெரு நற்கிள்ளி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகர், மாவட்ட பொருளாளர் கு.ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, ரெ.அசோக சக்கரவர்த்தி, பூ.செல்வராஜ், வா.சௌந்தர ராஜன்,கோ. அறிவழகன், மா.அன்பழகன், இரா.மணிமாறன்,ரெங்க, முருகன், ஆர். கலியபெருமாள்,வி.எழில் மாறன், நகர செயலாளர் வெ.கொ.கருணாநிதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜன்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி,

மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வின்செண்ட் ராஜா, அரியலூர் தொ.மு.ச. செயலாளர் பி.வி.அன்பழகன்,

மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ்ச் செல்வன், ஆர்.ஜி.மணிவேல், சி.ஆரோக்கியம், கோ.கனகராஜ், நெடுஞ்செழியன்,ஒன்றிய அவைதலைவர் நெப்போலியன் லூர்துசாமி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி,ராஜா, மனோஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் எம்.செல்வம், ஆனஸ்ட் அம்பிகாவதி,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ். ஆர்.முருகேசன்,

மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் உ.கருணாநிதி,மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் செல்வ.பிரபாகரன்,ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இலக்கியதாசன், ஒன்றிய தகவல்தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அருண், மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### தமிழ்நாடு முழுவதும் கனமழை:

# குமரி ஆறுகளில் வெள்ளப்பெருக்கு!

நாகர்கோவில்,நவ.10-

தமிழ்நாடு முழுவதும் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இடியுடன் கூடிய கனமழை பெய்த கோதையாறு, பரளி ஆறு மற்றும் குழித்துறை தாமிரபரணி ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்தது செல்கிறது, மேலும் 11 வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.கன்னியாகுமரி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்து வருகிறது. காலை நேரம் வெயிலும், பிற்பகலில் இடியுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. நேற்றும் பகல் வேளையில் வெயில் கொளுத்திய நிலையில் கன மழை நீடித்தது. மாவட்டத்தில் அதிக பட்சமாக களியல் பகுதியில் 76 மி. மீ., மாம்பழத்துறையாறு பகுதியில் 65.4 மி. மீ., ஆனைகிடங்கு, திற்பரப்பு பகுதியில் 64 மி. மீ. மழையும் பதிவாகி இருந்தது. ஏற்கனவே பெய்த மழையில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட அணைகள் வெள்ள அபாய அளவை எட்டிய நிலையில் வெள்ள அபாய எச்சரிக்கை தொடர்கிறது. மேலும் சிற்றாறு அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டதாலும், மழை வெள்ளத்தினாலும், கோதையாறு, பரளி ஆறு மற்றும் குழித்துறை தாமிரபரணி ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது, ஆறுகளில் குளிக்க வேண்டாம், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனவும் மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது. வெள்ள பெருக்கு காரணமாக திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க பேரூராட்சி நிர்வாகம் தடை விதித்து உள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட ஒழையூர் ஊராட்சிக்குட்பட்ட காட்டுப்புத்தூர் கிராமத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை முன்பு காஞ்சி தெற்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து பெறும் நிகழ்வை மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் தொழிலாளரணி மாநில செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ், ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்ட அமைப்பாளர் கார்த்திகேயன், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், தொழிலாளரணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## 'விகடன்' - முன்னாள் தலைமைப்

# புகைப்படக் கலைஞர் சு.குமரேசன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 10-

விகடன் முன்னாள் தலைமைப் புகைப்படக் கலைஞர் சு.குமரேசன் அவர்கள் மறைவிற்குதமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

மூத்த புகைப்படப் பத்திரிகையாளர், விகடன் முன்னாள் தலைமைப் புகைப்படக் கலைஞர் சு. குமரேசன் அவர்கள் நேற்றிரவு மறைவெய்தினார் என்று அறிந்து வருந்துகிறேன்.

திராவிட இயக்க மேடைகளில் பகுத்தறிவு ஒளிவீசிய மகா மதுரகவி வீ.வே. முருகேசபாகவதர் அவர்களின் பெயரனான குமரேசன் அவர்கள், விகடன் குழுமத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். கடந்த வாரம்தான் பூர்வீகக் குடிகளின் பாவலர் முருகேச பாகவதர் படைப்பு நூலுக்கு எனது வாழ்த்துச் செய்தியை பெற்றுச் சென்றார். தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றுப் பக்கங்கள் பலவற்றை தனது புகைப்படக் கருவியின் வாயிலாகப் பதிவு செய்தவர். தலைவர் கலைஞர், நான் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் புகைப்படங்களைப் பதிவு செய்தவர். குமரேசன் அவர்களது திடீர் மறைவு புகைப்பட இதழியல் உலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

## சிறைபிடிக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்கள் 38 பேரை விடுவித்தது இலங்கை!

இராமநாதபுரம், நவ. 10-

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி இலங்கைக் கடலோரக் காவல்படையினரால் கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்கள் 38 பேரை இலங்கை நீதிமன்றம் விடுவித்தது.

இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் இருந்து கடந்த அக்டோபர் மாதம் மீன் பிடிக்கச் சென்ற 38 மீனவர்களை இலங்கை கடலோரக் காவல் படை கைது செய்தது. மீனவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை மீட்க தூதரக ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார். மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இந்நிலையில் மீனவர்கள் மீதான வழக்கு நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது மீனவர்கள் 38 பேரை நிபந்தனை ஜாமீனில் நீதிபதி விடுதலை செய்தார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று, (09.11.2023), சென்னை, அமைந்தகரை, அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில், 8வது தேசிய ஆயுர்வேத தினத்தையொட்டி, டாம்ப்காலின் (TAMPCOL) புதிய தயாரிப்பான தீபாவளி லேகியத்தை அறிமுகம் செய்து. மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை ஆணையர் திருமதி.மைதிலி.கே.ராஜேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந.இராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் திருமதி.இராணி, இணை இயக்குநர் மரு.பார்த்திபன், மரு.மணவாளன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் காலியாக உள்ள

# முதுகலை மருத்துவ மாணவர் சேர்க்கை கலந்தாய்வை நீட்டித்திட வேண்டும்!

## ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சருக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கடிதம்!

சென்னை, நவ. 10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் அவர்கள் ஒன்றிய அரசு சுகாதாரத் துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா அவர்களுக்கு எழுதிய நேர்முக கடிதம் வருமாறு:

தமிழ்நாட்டில் MBBS இடங்களுக்கான காலியிடங்களை நிரப்ப கூடுதல் சுற்று கலந்தாய்வு நடத்தக் கோரிய எனது 13.10.2023 அன்று, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நான் எழுதிய கடிதத்திற்கு சாதகமாக பதிலளித்ததற்காக உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் அகில இந்திய ஒதுக்கீடு மற்றும் மாநில ஒதுக்கீட்டுக்கான இந்த கூடுதல் சுற்று கலந்தாய்வின் விளைவாக மாநிலத்தில் காலியாக உள்ள விலைமதிப் பற்ற MBBS இடங்கள் அனைத்தும் நிரப்பப்படும்.

இதே அடிப்படையில் தமிழ்நாடு மாநிலத்தில் முதுகலை மருத்துவம்/டிஎன்பி மற்றும் எம்டிஎஸ் இடங்களுக்கான சேர்க்கைக்கான கலந்தாய்வு 25.10.2023 அன்று நிறைவடைந்தது. நான்கு சுற்று கலந்தாய்வின் முடிவில் 69 MD/MS இடங்கள், 11 DNB இடங்கள் மற்றும் 48 MDS இடங்கள் இன்னும் காலியாக உள்ளன. இந்த இடங்களை நிரப்புவது மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் உதவியாக இருக்கும். எனவே, கூடுதல் சுற்று கலந்தாய்வு நடத்த அனுமதிக்க வேண்டும் என்றும், முதுகலை சேர்க்கைக்கான கடைசி தேதியை நீட்டிக்குமாறு இந்திய தேசிய மருத்துவ கவுன்சில் மற்றும் பல் மருத்துவ கவுன்சிலுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்துகிறேன்.

உயர் சிறப்பு மருத்துவ (சூப்பர் ஸ்பெஷாலிட்டி) (DM/MCh) படிப்புகளைப் பொறுத்தவரை, நாடு முழுவதிலும் தமிழ்நாட்டில் தான் அதிகபட்ச உயர் சிறப்பு மருத்துவ இடங்கள் உள்ளது என்பதையும், இந்த இடங்களில் மாநில ஒதுக்கீட்டில் 50% தமிழக அரசு அரசு பணியில் உள்ள மருத்துவர்களுக்கு ஒதுக்கியுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த ஒதுக்கீட்டின் மூலமாக உயர் சிறப்பு மருத்துவ சேவைகள் அனைத்து தரப்பு மக்களுக்கும் கிடைக்கப் பெறுகிறது அதே நடைமுறையைப் பின்பற்றி, அரசு பணியில் உள்ள மருத்துவர்களுக்கு 50% உயர் சிறப்பு மருத்துவ இடங்களை ஒதுக்கீடு செய்ய இந்த வருடமும் அனுமதி அளித்ததற்க்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்

முதுகலை பட்டப்படிப்பு விவகாரத்திலும் மாணவர் சமுதாயத்திற்கும், மாநில சுகாதார அமைப்புக்கும் பெரும் பயனளிக்கும், ஆக்கப்பூர்வமான பதிலை விரைந்து பெறுவோம் என்று நம்புகிறேன் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

## திருவான்மியூரில் சாலை விபத்தில் உயிரிழந்த

# தூய்மைப் பணியாளரின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

சென்னை திருவான்மியூர் சாலை விபத்தில் உயிரிழந்த தூய்மைப் பணியாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை சென்னை, திருவான்மியூர், அடையாறு மண்டலம், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில் நிகழ்ந்த சாலை விபத்தில் சென்னை பெருநகர மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராகப் பணியாற்றி வந்த திருமதி. சிவகாமி (வயது 42) க/பெ. வெங்கடேசன் என்பவர் பணியிலிருந்த போது அவர் மீது வாகனம் மோதியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

ஒக்கியம் துரைப்பாக்கத்திலுள்ள கண்ணகி நகரில் தன் கணவர், மகள் மற்றும் மகனுடன் வசித்து வந்த திருமதி. சிவகாமி இந்த சாலை விபத்தில் உயிரிழந்தது நமக்கெல்லாம் பெரும் வேதனை அளிக்கின்றது. அவரது குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் ஐந்து லட்சம் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமை - வி.பி.ரவிக்குமார் வரவேற்பு!

# கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை சார்பில் வசனம் மற்றும் கவிதை ஒப்பித்தல் போட்டி!

## அமைச்சர் ஆர்.காந்தி - இறையன்பன் குத்தூஸ் பங்கேற்பு!

சென்னை, நவ.10-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கான வசனம் மற்றும் கவிதை ஒப்புவித்தல் போட்டி, பெரியபாளையம் அடுத்த ஆத்துபாக்கம் வைஜெயந்தி மகால் திருமண மண்டபத்தில் இன்று (10.11.2023, வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் வி.பி. ரவிக்குமார், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி மாவட்ட நிர்வாகிகள், சி.மு.தேவன், செ.பாபு, ஜி.இளவரசன், பா.பூபாலன், பி.எல்.சி.ரவி வரவேற்புரையாற்றுகின்றனர்.

ஜெ.மூர்த்தி, மு.பகலவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, கே.சுப்பிரமணி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் முன்னிலை வகிக்கின்றனர்.

கலைஞரின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நடைபெறுகிறது. நடுவராக கோ. கோபாலகிருஷ்ணன், மு.முருகன், கு.சம்பந்தம், கி.பூபால் உள்ளனர்.

அமைச்சர் ஆர்.காந்தி, க.சுந்தரம், இ.ஏ.பி. சிவாஜி, சி.எச்.சேகர், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் கவிஞர் நன்மாறன் கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், வெ. அன்புவாணன், ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஒன்றிய நகர, பேரூர் செயலாளர்கள் மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகரன், பா.சுகுமாறன், எம்.எஸ்.கே.ரமேஸ்ராஜ், ஆ. சத்தியவேலு, நா.செல்வசேகரன், கே.வி.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், ஜான்(எ)பொன்னுசாமி, நா.பரிமளம், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து, க.சு.தமிழ்உதயன், அத்திப்பட்டு ஜி.ரவி, ராசாத்தி செல்வசேகரன், அப்துல்ரஷித், சகிலா அறிவழகன், ருக்குமணி மோகன்ராஜ், அணிகளின் அமைப்பாளர்கள் கே.வி. லோகேஷ், வெற்றி(எ) ராஜேஷ், மு.பாஸ்கரன், ஜி.பி. வெங்கடேசன், என். கிருஷ்ணமூர்த்தி, டி.மணி, ஏ.கே.சம்பத்குமார், ஜி. ரமேஷ், எஸ்.கோபி, எஸ். ரோஸ் பொன்னையன், பா.தனசேகரன், கே.ஆறுமுகம், என்.வில்சன் நிலவழகன், கே.சம்பத். தேசராணி தேசப்பன், ஜெயலிலதா சசிதரன், எம்.ஆர்.ஸ்ரீதர், பழவை முகமது அலவி, கே. ராஜேஷ், கோல்டுமணி, மு.தினகரன், சி.சுமன், ஜி.லட்சுமி நராயணன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

முடிவில் கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி மாவட்ட துணை தலைவர் எஸ்.எம்.திருநாவுக்கரசு நன்றி கூறுகிறார்.

## கல்லல் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகளுக்கு

# ரூபாய் 10 லட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை. நவ. 10-

சிவகங்கை மாவட்டம் கல்லல் மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் குன்னக்குடி சுப்பிர மணியன் ஏற்பாட்டின் பேரில் குன்றக்குடியில் ஒன்றிய கழகச் செயலாளர் குன்னக்குடி ஆர். ஜி. சுப்பிரமணியன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலை யில் கல்லல் மேற்குஒன்றிய கழக நிர்வாகிகள் முன்னோடிகள் 150 நபர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு. 4வது ஆண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நலத்திட்ட உதவிகளை கூட்டுறவுத்துறை அமைச்சரும் மாவட்டக் கழக செயலாளருமான கே ஆர் .பெரியகருப்பன் வழங்கி கழக முன்னோடிகள், நிர்வாகிகள் பணியினை பாராட்டி பேசினார் . மாவட்ட கழகத்தின் சார்பில் ருபாய் 2 லட்சம் நிதியினை ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணி யனிடம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் ராம.இளங்கோவன், பொதுக்குழு உறுப்பினர் கரு. அசோகன், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். நிகழ்ச்சியில் கல்லல்மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் அழகப்பன், மணிமுத்து, ஒன்றிய கவுன்சிலர்கள் மருதுபாண்டியன்,ஆரோக்கியசாமி,மாவட்ட கவுன்சிலர் ஏ.டி. என்.ரவி, தொழிலதிபர் விகே.என். மணிகண்டன், வேலுச்சாமிஅம்பலம், ,முருகப்பன் பேரூர்கழக செயலாளர் ஆர். கார்த்திகேயன், அவைத்தலைவர் ராம.ரவி, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் துணை அமைப்பாளர் மு,கமதுகனி, மாவட்ட தொழிலாளரணி துணை அமைப்பாளர் தனசேகரன் நிர்வாகிகள் காரைக்குடி சேவியர், ராசு, ராதா செல்வம், நாச்சியப்பன், முத்தழகு, பழனியப்பன், பெத்த பெருமாள், கணேசன், சுப்பிர மணியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, ஒன்றிய துணை செயலாளர் முத்துகுமார் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சேவியர், உட்பட ஒன்றிய கழக ஊராட்சி கழக நிர்வாகிகள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். முடிவில் இளைஞர் அணி அமைப்பாளர் குமார் நன்றி கூறினார்.

## நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில்

# 'நீட் விலக்கு நம் இலக்கு' கையெழுத்து இயக்கம்!

## நகரச் செயலாளர்கள் த.விஜய்கண்ணன் - ஜி.எஸ்.ஞானசேகர் பங்கேற்பு!

நாமக்கல், நவ.10-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆலோசனையின் பேரில் நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையத்தில் மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி சார்பில் "நீட்விலக்கு நம் இலக்கு" என்ற நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.பாலாஜி ஆலோசனைப்படி மாவட்ட இளைஞர் அணி துணை துணை அமைப்பாளர் கதிரவன் சேகர் மற்றும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஐயப்பன் (எ) பெருமாள் முன்னேற்பாட்டில் குமாரபாளையத்தில் "நீட் விலக்கு நம் இலக்கு" கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

குமாரபாளையம் வடக்கு நகர பொறுப்பாளரும், நகர மன்ற தலைவருமான த.விஜய் கண்ணன் மற்றும் தெற்கு நகர பொறுப்பாளர் ஜி.எஸ்.ஞானசேகர் தலைமை தாங்கினர்.




பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில் நேற்று (09.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற பாலின தேவைகள் உள்ளடக்கிய சென்னையை உருவாக்குதல், கற்றறிந்தவை மற்றும் முன்னோக்கி செல்லும் வழி குறித்த நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சின்னம் (Logo) மற்றும் வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றப்பிரிவு) திருமதி கல்பனா நாயக், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) சரவணபவானந்தம் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நாடாளுமன்றத் தேர்தல்: சென்னையில்

# இந்தியத் தேர்தல் ஆணைய அதிகாரிகள் கூட்டம்!

## தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநில அதிகாரிகள் பங்கேற்பு!

சென்னை, நவ.10-

நேற்று (09.11.2023), 2024-இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான ஆயத்தப்பணிகளின் முக்கிய அம்சங்களை ஆய்வு செய்வதற்காக தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப்பிரதேசம், கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள் மற்றும் இலட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாநில காவல் துறை ஒருங்கிணைப்பு (Nodal) அதிகாரிகளின் மண்டல மாநாடு இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள ஹோட்டல் ரேடிசன் புளூவில் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியால் நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டில், மூத்த துணைத் தேர்தல் ஆணையர் மற்றும் மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேசப் பயிற்சி(IIIDEM) நிறுவனத்தின் தலைமை இயக்குநர் தர்மேந்திர ஷர்மா, மூத்த துணைத் தேர்தல் ஆணையர் நிதேஷ் வியாஸ், துணைத் தேர்தல் ஆணையர் மனோஜ் குமார் சாஹூ மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மூத்த அதிகாரிகள், மேற்கண்ட மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல் துறை ஒருங்கிணைப்பு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கம் சார்பாக மாநிலத் தலைவர் ரெ.தங்கம் தலைமையில் நடைபெற்ற தீப ஒளி திருநாள் நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பட்டாசுகள்,இனிப்பு பெட்டகங்களை வழங்கினார். 141அ வட்ட கழக செயலாளர் எஸ்.லெட்சுமிகாந்தன், சங்க பொதுச்செயலாளர் எஸ்.சரவணகுமார், சங்க பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், வர்த்தக அணி மாவட்ட துணை அமைப்பாளர் பூங்கொடி இரா.கோவிந்தராஜ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி சரிதா தங்கம், பி.ஆர்.ஒ.பா.சக்திவேல், துணைப்பொதுச்செயலாளர்கள் க.இளங்கோவன், கி.பத்மநாபன், பா.வெங்கடேசன், ஆர்.சீனிவாசன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் இளங்கோ,பால்தேவ், மணி,பிஎஸ்என்எல் முனீர்,தி.நகர் கிழக்கு பகுதி மகளிர் அணி நிர்வாகிகள் பவானி ரவி,எலிசபெத், பூங்கொடிகுமரன் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி 115 (அ) வட்டம் சூரப்பா தெருவில் 1500 பேருக்கு கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், சேப்பாக்கம் எஸ்.மதன் மோகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி சேப்பாக்கம் பகுதி 63 (அ) வட்டம் சையது உசேன் தெருவைச் சேர்ந்த பொதுமக்களுக்கு கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் சேப்பாக்கம் எஸ்.மதன் மோகன், ஏ.ஆர்.பி.எம். காமராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில்

## ஆயுர்வேத விழிப்புணர்வு கையேடு - தீபாவளி லேகியம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை,நவ.10-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (09.11.2023), சென்னை, அமைந்தகரை, அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனையில், 8வது தேசிய ஆயுர்வேத தினத்தையொட்டி, ஆயுர்வேத விழிப்புணர்வு கையேட்டினை வெளியிட்டு, டாம்ப்காலின் (Tampcol) புதிய தயாரிப்பான தீபாவளி லேகியத்தை அறிமுகம் செய்து, 8வது தேசிய ஆயுர்வேத தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற ஆயுர்வேத கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆயுஷ் பட்டய படிப்பு மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது;

**டாம்ப்கால் புதிய தயாரிப்பு தீபாவளி லேகியம் :**

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 10 ஆம் தேதியன்று தேசிய ஆயுர்வேத தினம் கொண்டாடப்படுகிறது. 07.11.2023 முதல் 09.11.2023 வரை 3 நாட்கள் அறிஞர் அண்ணா அரசு இந்திய மருத்துவமனை வளாகத்தில் கண்காட்சி நடைபெற்றது. மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் நோய்கள் வராமல் காப்பது பற்றி இந்த கண்காட்சி நடத்தப்பட்டது. அடுப்பங்கரையில் ஆயுர்வேதம் என்ற அரங்கம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. உடலுக்கு சத்தான நவதானிய உருண்டை, மூலிகைத் தேனீர், கோதுமை லேகியம் போன்ற பொருட்கள் இந்த அரங்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கண்காட்சியை காணவரும் அனைவருக்கும் இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூலிகைச் செடிகள் குறித்து விளம்பர பதாகைகள் வைக்கப்பட்டு, விற்பனையும் செய்யப்பட்டு வருகிறது. நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் ஆயுர்வேதம் என்ற தலைப்பில் எந்த மாதிரியான உணவு பொருட்களை உட்கொள்வது, மேற்கொள்ள வேண்டிய மருத்துவ முறைகள், ஆயுர்வேத முறையில் முகம் மற்றும் சருமம் பராமரிப்பு, பெண்களுக்கான நல மருத்துவம், நீரிழிவு நோயாளிகள் கடைபிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள், ஆயுர்வேத முறையில் கூந்தல் பராமரிப்பு, சீரற்ற வாழ்வியல் நோய்கள் என்ற வகையில் கையேடு தயாரிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது. டாம்ப்கால் என்கின்ற இந்திய மருத்துவ முறையின், மருந்து தயாரிப்பு மையம் இந்தியாவிற்கே வழிகாட்டும் அமைப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் கீழ் தயாரிக்கப்பட்ட தீபாவளி லேகியம் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்காக விற்பனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

**மருத்துவ முறைகளை மாற்றி மருத்துவம் பார்ப்பது குற்றம் :**

சித்த மருத்துவம், ஹோமியோபதி, யுனானி, ஆயுர்வேதம் ஆகிய அனைத்தும் பழங்கால பாரம்பரிய மருத்துவ முறையாகும். ஒவ்வொரு மருத்துவத்தையும் பல்வேறு மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். சித்த மருத்துவ பல்கலைக் கழகத்தை கொண்டு வரும் முயற்சியை மேற்கொண்டு வருகிறோம். யுனானி மருத்துவத்திற்கு இளங்கலை படிப்பு இருந்தது, தற்போது முதுகலை படிப்பு கொண்டுவரப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக பாரம்பரிய மருத்துவத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பெருந்துணையாக இருந்துக் கொண்டிருக்கிறது. இந்த படிப்புகளை முடித்த மருத்துவர்கள் அவரவர் சார்ந்த துறையில் மட்டுமே பணிபுரிய வேண்டும், அதனை தாண்டி அவர்கள் அல்லோபதி மருத்துவ முறைகளை பயன்படுத்தி மருத்துவம் பார்ப்பது சட்டப்படி குற்றமாகும். அவ்வாறு கண்டறியப்பட்டால் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த 1 வாரத்தில் மட்டும் 3 மருத்துவமனைகளின் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை, நலம் மருத்துவமனையின்மீது இது தொடர்பாக புகார் பெறப்பட்டது, உடனடியாக இணை இயக்குநர் (சட்டம்) அவர்கள் விசாரணை மேற்கொண்டு புகார் உண்மை என்று கண்டறிந்து, அந்த மருத்துவரின் மீது நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறையினரிடம் புகார் தெரிவித்துள்ளார். அதன்படி அந்த மருத்துவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இன்று துறையின் செயலாளர் அவர்கள், அனைத்து மாவட்ட இணை இயக்குநர்கள் தலைமையிலான குழுவினை அமைத்துள்ளார். இந்த மருத்துவ குழுவினர் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மருத்துவமனைகளிலும் ஆய்வு மேற்கொண்டு, விதிமுறை மீறி சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறதா என்று கண்டறியவுள்ளனர். அப்படி விதிமீறல் இருந்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதித் துறை ஆணையர் திருமதி. மைதிலி.கே.ராஜேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந.இராமலிங்கம், மாமன்ற உறுப்பினர் திருமதி.இராணி, இணை இயக்குநர் மரு.பார்த்திபன், மரு. மணவாளன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ்

## அதிகபட்சமாக பயன்பெறும் மாணவிகள் - நாமக்கல் மாவட்டம் முதலிடம்!

### கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பெருமிதம்!

நாமக்கல், நவ. 10 -

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், கரடிப்பட்டி யில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

முகாமில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கலந்துகொண்டு, 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசும்போது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்டவர்கள் இ-சேவை மூலம் மேல்முறையீடு செய்யப்பட்டு வரப்பெற்ற விண்ணப்பங் களை வட்டாட்சியர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற சரிபார்ப்பு பணி, மேல்முறையீடு செய்தவர்களின் மனுக்களை பரிசீலனை செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மேல்முறையீடு செய்த குடும்பத் தலைவிகளுக்கு அடுத்த இரண்டு, மூன்று தினங்களில் மாதம் தோறும் ரூ.1,000/ வழங்கப்பட உள்ளது.

இத்திட்டம் என்பது தொடர் திட்டமாகும். எனவே, விண்ணப்பிக்காத குடும்பத்தலைவிகளும் கூட விண்ணப்பித்து இத்திட்டத்தில் பயன்பெறலாம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளியில் பயின்று மேற்படிப்பு / தொழில்நுட்ப படிப்பு பயிலும் மாணவிகளுக்கு மாதம் தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமை பெண் திட்டம் தொடங்கி வைத்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் அதிகபட்சமான மாணவிகள் பயன் பெற்று நாமக்கல் மாவட்டம் முதலிடத்தில் இருப்பது பெருமைக்குரியது ஆகும். மேலும், நாமக்கல் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் பொதுமக்களுக்கு அரிசி, சர்க்கரை, பருப்பு, கோதுமை உள்ளிட்ட உணவு பொருட்கள் தரமான முறையில் வழங்கப்பட்டு வருகின்றது.

இன்றையதினம் கரடிப்பட்டியில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெறுவதையொட்டி, இப்பகுதியில் நீண்ட நாட்களாக தீர்க்கப்படாத கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஒரு மாத காலத்திற்கு முன் துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் மற்றும் வட்டாட்சியர் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் கரடிப்பட்டி கிராம பகுதிக்கு நேரடியாக வருகை புரிந்து கடந்த ஒரு மாத காலமாக தொடர்ந்து மனுக்களைப் பெற்று வந்தனர். மேலும் அந்த மனுக்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இன்று 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வறாக மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்றி வரும் அரசிற்கு தொடர்ந்து ஆதரவு அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

முன்னதாக வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்பு துறை, பட்டு வளர்ச்சி துறை, சமூக நலத் துறை, தாட்கோ, வருவாய்த் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட துறை, முதலமைச்சர் மற்றும் பாரத பிரதமரின் மருத்துவ அடையாள அட்டைகள் வழங்கும் முகாம் உள்ளிட்ட அரசு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளதை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் பார்வையிட்டார்.

தொடர்ந்து, இம்முகாமில்,அரசின் பல்வேறு துறை சார்பில் 462 பயனாளிகளுக்கு ரூ.61.33 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் மு.செந்தில்குமார், ஊராட்சி மன்றத் தலைவர் வீ.நாகராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி மா.பிரியா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் த.செல்வகுமரன், நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் மா.க.சரவணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ச.பாலாகிருஷ்ணன், தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் (பொறுப்பு) மரு.எம். நடராஜன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் எஸ்.துரைசாமி, தோட்டக்கலைத்துறை (துணை இயக்குநர்) கே.கணேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கே.முருகன், நாமக்கல் வட்டாட்சியர் சக்திவேல் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

## சாலவாக்கம் ஒன்றியத்தில் நீட் விலக்கு கையெழுத்து இயக்கம்!

### பி.டி.சி. செல்வராஜ் – டி.குமார் பங்கேற்பு!

காஞ்சிபுரம், நவ. 10

சாலவாக்கம் ஒன்றியத்திற்குட்பட்ட காட்டுப்புத்தூர் கிராமத்தில் தி.மு.க. தொழிலாளரணி சார்பில் பொதுமக்களிடம் ‘நீட்’ தேர்வுக்கு எதிராக மாபெரும் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்த காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் தொழிலாளரணி மாநில செயலாளர் செல்வராஜ் திரளான பொதுமக்கள் கையெழுத்திட்டு எதிர்ப்பு தெரிவித்தனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து இயக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் இளைஞரணி செயலாளர் விளையாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

நீட் விலக்கு நம் இலக்கு என்ற தலைப்பில் 50 நாட்களில் 50 லட்சம் பெறும் கையெழுத்து இயக்கத்தை தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் ஒன்றி யத்திற்குட்பட்ட ஒழையூர் ஊராட்சிக்குட்பட்ட காட்டுப் புத்தூர் கிராமத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை முன்பு காஞ்சி தெற்கு மாவட்ட தொழிலளர் அணி சார்பில் நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து பெறும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நீட் தேர்வுக்கு எதிராக நடைபெறும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தினை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் மற்றும் தொழிலாளரணி மாநில செயலாளர் செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து தொழிற்சாலையில் பணிபுரியும் திரளான ஆண்கள் மற்றும் பெண்களிடம் நீட் தேர்வு எதிராக கையெழுத்து பெற்றுக் கொண்டார்.

இதில் சுமார் 400 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஆர்வத்துடன் நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்திட்டு எதிரப்புகளை தெரிவித்தனர்.

இதில் ஒன்றிய செயலாளர் டி.குமார், மாவட்ட அமைப்பாளர் கார்த்திகேயன், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், தொழிலாழரணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவொற்றியூர் 6வது வட்டப் பொருளாளர்

## ஜே.ஆர்.டி.சேகரின் புதிய அலுவலகம்!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்!

சென்னை, நவ. 10-

திருவொற்றியூர் 6வது வட்டப்பொருளாளர் ஜே.ஆர்.டி. சேகரின் புதிய தொழில் நிறுவனத்தை மாநில மீனவர் அணி துணைத்தலைவர், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், இன்று (10.11.23 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணிக்கு திறந்து வைக்கிறார்.

மாமன்ற உறுப்பினர்கள் கே.பி.சொக்கலிங்கம், பானுமதி சந்தர், கோமதி சந்தோஷ்,வீ. கவி கணேசன், ஆர். ஜெயராமன், எம்.எஸ். திரவியம்,தலைமை கழக பேச்சாளர்கள் எழும்பூர் கோபிநாத், வாசு கருணாநிதி, கழக நிர்வாகிகள் வீ.இராமநாதன், இரா. முருகேசன், ஆர்.டி. மதன்குமார், இ.ரமேஷ், ஆர்.சந்தர், எம்.எல். சரவணன், ஏகா. கார்த்திகேயன், க.வீ. சதீஷ்குமார், இராயபுரம் சு.சேகர், கே.பிரபாவதி, கே.பவுல், கி. கண்ணன், எம்.எஸ். நாகலிங்கம்,

மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ், எஸ்.மகேந்திரன், கே.கார்த்திகேயன், ஜெ.பி.சந்தானகிருஷ்ணன், பா.பாலஉமாபதி, கு. தமிழ்மணி,கவிஞர் த.மகிழன், எம்.கார்த்திக், எஸ்.ஆர். அண்ணாமலை, கே.சந்தோஷ்குமார், பிரட் சுரேஷ், எம்.தயாநிதி,வீ.சி. சூரியா, எஸ்.முத்தையா, எஸ்.தனசேகரன், தளபதி சிவாஜி, கே.ராஜேஷ் கண்ணா, எஸ். விஜயராகவன்,ஆர். பிரகாஷ், கலை சரவணன், பி.அசோக், எம். பிரேம், எம்.செல்வம், அ. தமிழ் இன்பன், மணலி வி.குமார், எம்.வசந்த ராஜ், டி.இ.பரணி குமார், கே. எஸ்.ஆனந்தன்,இரா.கணேசன், எம். எல். வேலன், ஜெ. கருணாநிதி, ஜெ.சுந்தரம், எஸ்.முத்துராஜ், பி. ராமராஜ்,மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.



நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டப்பேரவை மனுக்கள் குழு ஆய்வு கூட்டத்தில் சட்டப்பேரவை மனுக்கள் குழு தலைவர் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் பயனாளிகளுக்கு வரன்முறை பட்டாக்களை வழங்கினார்.உடன் குழு உறுப்பினர்கள் ஐயப்பன் (கடலூர்)கந்தசாமி(சூலூர்) நல்லதம்பி (திருப்பத்தூர்) பொன்னுச்சாமி(சேந்தமங்கலம்) முத்துராஜா(புதுக்கோட்டை) ராதாகிருஷ்ணன் (விருத்தாச்சலம்) மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் சட்டப்பேரவை துணை செயலாளர் ரமேஷ்,மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ் உள்பட பலர் உள்ளனர்.



அரிய வகை முகச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பெரும் முயற்சியால் நலம் பெற்று இருக்கும் ஆவடியைச் சேர்ந்த சிறுமி தானியாவிற்கு முன்னாள் அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தீபாவளி சிறப்பு பரிசுகளை வழங்கினார். அருகில் சிறுமியின் பெற்றோர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி ஆத்தூர் தொகுதி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று உடனடி தீர்வு கண்டார். மேலும் ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்கம் சார்பாக ஜனவரி 7ம் தேதி திண்டுக்கல்லில் நடைபெறும் மாநில மாநாட்டில் அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்துகொள்ள மாநில நிர்வாகிகள் அழைப்பு விடுத்தனர்.உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



அமீரக திமுக அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு கருத்தரங்க விழா கடந்த திங்களன்று (6.11.2023) நிகழ்ச்சி துபாய் தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட்மார்க் கிராண்ட் ஹோட்டலில் நடைப்பெற்றது. இதில் கழக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா சிறப்புரையாற்றினார். உடன் எம்.எம்.அப்துல்லாஹ் எம்.பி. – எஸ்.எஸ். மீரான் உள்ளிட்ட முன்னணியினர் பங்கேற்றனர்.

# துபாயில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்!

## திருச்சி சிவா சிறப்புரை! எம்.எம்.அப்துல்லா எம்.பி. - எஸ்.எஸ். மீரான் பங்கேற்பு!

துபாய், நவ. 10-

அமீரக திமுக அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் ஏற்பாட்டில், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு கருத்தரங்க விழா கடந்த திங்களன்று (6.11.2023) நிகழ்ச்சி துபாய் தேரா பகுதியில் அமைந்துள்ள லேண்ட்மார்க் கிராண்ட் ஹோட்டலில் இரவு 7 மணியளவில் நடைப்பெற்றது.

அமீரக திமுக பொறுப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய உறுப்பினருமான எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைப்பெற்ற இந்த நிகழ்வை ஆசிஃப் மீரான் தொகுத்து வழங்கினார்..

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக திமுக கொள்கைப்பரப்புச செயாலாளாரும் மாநிலங்களவைக் குழுத் தலைவருமான திருச்சி சிவா எம்.பி., அயலக அணி செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான எம்.எம். அப்துல்லா, தலைமை செயற்குழு உறுப்பினர் கீரை தமிழ் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழஞ்சலி செலுத்தும் வகையில் அவரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லாஹ் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளையும், அவரது இலக்கிய படைப்புகள் குறித்தும் நினைவு கூர்ந்தார்.

கலைஞர் கொண்டு வந்த இலவசத் திட்டங்கள், மகளிர் கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியது குறித்தும், அரசு வருவாய் மேம்பட வழி வகுத்தது குறித்தும் விளக்கமாகப் பேசினார்.

தொடர்ந்து பேசியவர், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அமீரக திமுக பொறுப்பாளரும், வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.மீரான் அவர்களை வெகுவாகப் பாராட்டினார். கலைஞரின் ஜனநாயக அணுகுமுறை குறித்து உதாரணங்களைக் கூறினார்.

மேலும் அயலக அணியின் அவசியம் குறித்தும், செயல்பாடுகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

அதனை தொடர்ந்து பேசிய திமுக மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா அவர்கள் “ஐக்கிய அமீரகத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தாலும் கழக உடன்பிறப்புகளான உங்களையெல்லாம் சந்திப்பது மனநிறைவைத் தருகிறது” என்றார்.

மேலும் முத்தமிழ் கலைஞர் அவர்களுக்கும் தனக்கும் இருந்த உறவையும், தன்னுடைய வளர்ச்சிக்கு இளம் வயதிலிருந்தே பெரும் ஆதரவாக இருந்த அவரது பழைய நினைவுகளை நினைவு கூர்ந்தார். கழகம் இக்கட்டான சூழலில் இருந்த போதெல்லாம் அண்ணா வழியில் இந்த கழகத்தை கட்டுக்கோப்பாக வைத்திருந்ததால்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அனைவரின் மனதிலும் நிலைத்து நிற்கிறார்.

உலகெங்கும் வாழக் கூடிய தமிழர்கள் அனைவரும் இன்னும் நூறாண்டு காலம் தலைவர் கலைஞர் அவர்களை நினைத்து வைத்திருப்பார்கள் என்று தனது உரையில் குறிப்பிட்டு பேசினார்.

தந்தை பெரியாரின் கையில் இருக்கும் தடி இன்னமும் பலருக்கு கிலியை ஏற்படுத்துகிறது என்றார். மேலும், ஆசிஃப் மீரானின் நேர்த்தியான நிகழ்ச்சித் தொகுப்பு குறித்து பாராட்டினார்.

முன்னதாக வாழ்த்துரை வழங்குவதற்காக ஜமால் முஹம்மது கல்லூரி முன்னாள் துணை முதல்வர் பேராசிரியர் மன்சூர், ஹுசைன் நெல்லை கிழக்கு மாவட்ட தலைவர் எல்.கே.எஸ். மீரான், ஊடகவியாளர் முதுவை ஹிதயாத்துல்லா, ஆர்.ஜே சாரா, தமுமுக அப்துல் ஹாதி, கவிஞர் சசிகுமார், நஜ்முதீன், பிலால் அலியார், மதிமுக பாலா, கவிஞர் மரியம் கபீர், , அய்மான் சங்க நிர்வாகிகள் அதிரை சாகுல் ஹமீது, அப்துல் காதர், முத்தமிழ் சங்க ஷா, ஈமான் ஜாகிர் காயிதே மில்லத் பேரவை ஹமீத் ரஹ்மான், பிரசன்னா, முஸ்லிம் லீக் பரக்கத் அலி, காமில், தமிழ் செல்வன், அமீரகத் தமிழ் சங்கம் சிலு, சோசியல் ஒர்கர் ரீலேகா, டயானா, ரெங்கராஜன், EMAAR இயக்குனர் ஆனந்த், மேலாளர் முபாரக், ஜெஸீலா பானு,

ஆர்.ஜே அஞ்சனா, தமுமுக அப்துல் ஹாதி, இப்ராஹிம், செல்வி சானியா, திருச்சி கோல்ட் ஹபீபுல்லாஹ் மற்றும் பல்வேறு பிரமுகர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் அமீரக திமுக நிர்வாகிகள் எம்.எம். முஸ்தஃபா, பிளாக் துலிப் செந்தில், அன்பு, அபுதாபி ஜாகிர் ஹுசைன், இளமுருகன், வி.எம்.பிரபு, இர்ஷாத், பருத்தி இக்பால், இஞ்சினியர்பாலா, கபீர்,, பாண்டியன், தாரிக், கடையநல்லூர் உதுமான், அமீன், உதயநிதி ரசிகர் மன்ற இணை செயலாளர் வி.கே.புரம் பாலா, தாவுத், பாவை பாஹீம், மேலாப்பாளையம் ஃபரீத், ஜெகபர் அலி, மற்றும் ஏராளமான அமீரகம் வாழ் கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் நேற்று இரவு கனமழை!

சென்னை, நவ. 10-

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. இதனால், சாலைகளில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல், மீனம்பாக்கம், கிண்டி, சைதாப்பேட்டை, எழும்பூர், ஈக்காட்டுத்தாங்க, அசோக் நகர், கே.கே.நகர், வளசரவாக்கம், போரூ, அமைந்தகரை, அண்ணாநகர், முகப்பேர் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது.

இதேபோன்று சென்னை புறநகர்ப் பகுதிகளான அம்பத்தூர், ஆவடி, திருமுல்லைவாயல், பூவிந்த வல்லி, வண்டலூர், தாம்பரம், பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

மத்தியகிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே பகுதியில் நிலவுவதால், கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தென் மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

சென்னையில், அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்யக்கூடும் எனவும் குறிப்பிட்டிருந்தது.

## வைகை அணையிலிருந்து

# 900 கன அடி தண்ணீர் திறப்பு!

## நீர்வளத்துறை உத்தரவு!

சென்னை, நவ.10-

பெரியாறு பிரதான கால்வாய் பாசன பகுதியின் கீழ் உள்ள இருபோக பாசன பகுதியில் முதல் போக பாசன பரப்பில் உள்ள நிலங்களில் விவசாயம் செய்வதற்கு 10.11.2023 முதல் நாள் ஒன்றுக்கு 900 கனஅடி வீதம் 45 நாட்களுக்கு முழுமையாகவும் 75 நாட்களுக்கு முறை வைத்தும் மொத்தம் 120 நாட்களுக்கு தண்ணீரின் இருப்பு மற்றும் எதிர்ப்பார்க்கப்படும் நீர்வரத்தினை பொறுத்து தேவைக்கேற்ப வைகை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள 45,041 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# கழக தலைவர் மு.க.ஸ்டாலின்

அவர்களின் நல்வாழ்த்துக்களுடன்

மதிப்புமிகு. **மு.க.தமிழரசு** திருமதி. **மோகனா தமிழரசு**

...ஆகியோரின் திருக்கரங்களால் திருமணம் நடைபெறும்...

*வரவேற்பு விழா தலைமை*

திரு. **மயிலை த.வேலு** BA.,LLB.,MLA.,

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்

வரவேற்புரை ♦ திரு. **ஜெ.கருணாநிதி** MLA., திரு. **கே.ஏழுமலை** MC.,

தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர் — தியாகராயநகர் மேற்கு பகுதி கழகச் செயலாளர்

முன்னிலை ♦ திரு. **ந.இராமலிங்கம்** MC.,

அண்ணாநகர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் ♦ ஆளுங்கட்சி தலைவர் சென்னை மாநகராட்சி

திரு. **ஐ.கென்னடி** — மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்

திரு. நந்தனம் **கி.மதி** MC., — மயிலை மேற்கு பகுதி கழகச் செயலாளர்

திரு. **எஸ்.முரளி** — மயிலை கிழக்கு பகுதி கழகச் செயலாளர்

திரு. சைதை **எம்.கிருஷ்ணமூர்த்தி** MC., — 10-வது மண்டல குழு தலைவர்-சைதை மேற்கு பகுதி கழகச் செயலாளர்

*வாழ்த்துரை*

கழக இளைஞர் அணி செயலாளர்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்

## மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு. **துரைமுருகன்** — கழக பொதுச்செயலாளர்

திரு. **டி.ஆர்.பாலு** எம்.பி — கழக பொருளாளர்

மாண்புமிகு. **கே.என்.நேரு** — கழக முதன்மைச் செயலாளர்

மாண்புமிகு. **ஐ.பெரியசாமி** — கழக துணைப் பொதுச்செயலாளர்

திரு. **க.பொன்முடி** — கழக துணைப் பொதுச்செயலாளர்

திருமதி. **கனிமொழி கருணாநிதி** எம்.பி — கழக துணைப் பொதுச்செயலாளர்

மாண்புமிகு. **ஆ.ராசா** எம்.பி — கழக துணைப் பொதுச்செயலாளர்

திரு. அந்தியூர் **ப.செல்வராஜ்** எம்.பி — கழக துணைப் பொதுச்செயலாளர்

மாண்புமிகு. **மா.சுப்பிரமணியன்** — மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு. **பி.கே.சேகர்பாபு** — இந்து சமய அறநிலையத்துறை (ம) செ.பெருநகர வளர்ச்சிகுழுமம் அமைச்சர்

மாண்புமிகு. அன்பில் **மகேஷ் பொய்யாமொழி** — பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

முனைவர். **தமிழச்சி தங்கபாண்டியன்** — தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **தயாநிதி மாறன்** — மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **கலாநிதி வீராச்சாமி** — வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

திரு. **ஆர்.எஸ்.பாரதி** — கழக அமைப்பு செயலாளர்

திரு. **அன்பகம்கலை** — கழக இணை அமைப்புச் செயலாளர்

திரு. **நே.சிற்றரசு** — சென்னை மேற்கு மாவட்ட கழகச்செயலாளர்

திரு. ஆவடி **சா.மு.நாசர்** MLA., — திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச்செயலாளர்

திருமதி. **பிரியாராஜன்** — மேயர்-பெருநகர சென்னை மாநகராட்சி

திரு. **மு.மகேஷ்குமார்** — துணை மேயர்-பெருநகர சென்னை மாநகராட்சி

திரு. **பூச்சிமுருகன்** — தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர்

**கோ.சு.மணி** ♦ **எஸ்.மோகன்** ♦ **ராஜாஅன்பழகன்** MC., அண்ணா அறிவாலயம் ♦ **R.பத்மநாபன்** ♦ **N.ஜெயகுமார்**

மாவட்ட நிர்வாகிகள் ♦ மாம்பலம் **ஆ.சந்திரசேகர்** ♦ கோடம்பாக்கம் **மு.சத்யா** ♦ நந்தனம் **வேதா** ♦ **கே.மலர்** ♦ **என்.அன்பழகன்**

மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில,
மாவட்ட நிர்வாகிகள் பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள்
அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.

jagan adds 98417 02981

**கே.எஸ்.வெல்டிங்ராஜா** — 132வது 'அ' வட்ட கழகச் செயலாளர்

**கார்த்திகா பாஸ்கர்** MC., — 132வது வார்டு மாமன்ற உறுப்பினர்

**A.பாலையா - B.ஹேமாவதி**


கலைஞர் 100
1924 - 2023
வழக்கறிஞர்
Ln.ந.பரந்தாமன்
பொதுக்குழு உறுப்பினர்
மு.தேவராஜ்
பேரூர் தி.மு.க. செயலாளர்
திருப்போரூர் பேரூராட்சி மன்ற தலைவர்
இல்லத் திருமண விழாவிற்கு வருகை தரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
மாண்புமிகு இளைஞர் நலன்(ம்) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே
வருக! வருக!!
வருக! வருக!! வருக!!!
மணமக்கள்:
ந.ப.கருணாநிதி
M.A.,B.L.,(Hons) M.L.,MBA.,MSW.,M.Phil
தே.மேனகாதேவி M.E.,
மணநாள்: 10.11.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி
இடம்: ராம் லக்ஷ்மி பேரடைஸ், மாதவரம், சென்னை – 60.
SPEED 9941686622
மாதவரம்.எஸ்.சுதர்சனம் M.A.,B.L., MLA
சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர்


மணமக்கள் ♦ செல்வன் பா.முரளி ♦ செல்வி B.எழிலரசி
மணநாள் : 10-11-2023 வெள்ளிக்கிழமை காலை 7.30 - 9.00 மணிக்குள்
இடம் : ஸ்ரீ வடபழனி முருகன் திருக்கோயில், வடபழனி
வரவேற்பு நாள் : 10-11-2023 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி
இடம் : ராகவேந்திரா திருமண மண்டபம், விஸ்வநாதபுரம் பிரதானசாலை, கோடம்பாக்கம், சென்னை - 24.
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழக தலைவர் மு.க.ஸ்டாலின்
அவர்களின் நல்வாழ்த்துக்களுடன்
132வது 'அ' வட்ட கழகச் செயலாளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா
அவர்களின்
இல்லத் திருமணவிழாவிற்கு வாழ்த்த வருகைதரும்
கழக இளைஞர் அணி செயலாளர்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர்
மாண்புமிகு. உதயநிதி ஸ்டாலின் அவர்களையும்
மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணைமேயர், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பிற அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறோம்.
மயிலை த.வேலு BA.,LLB.,MLA.,
சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர்
முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் MP.,
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
அன்புடன் வரவேற்கும்
ஜெ.கருணாநிதி MLA.,
தியாகராயநகர் கிழக்கு பகுதி கழகச் செயலாளர்
கே.ஏழுமலை MC.,
தியாகராயநகர் மேற்கு பகுதி கழகச் செயலாளர்
தியாகராயநகர் கிழக்கு - மேற்கு பகுதி தி.மு.க


மு.தேவராஜ் எம்.ஏ
பேரூர் தி.மு.க செயலாளர்
பேரூராட்சி மன்றத் தலைவர், திருப்போரூர்
N.பரந்தாமன் M.A.B.L.,
தி.மு.க தலைமை பொதுக்குழு உறுப்பினர்
உரிமையாளர், கருணா பில்லிங் ஸ்டேசன்
இவர்களின் இல்ல இல்லற ஏற்பு விழா
திருமணத்தை தலைமையேற்று நடத்திவைக்க வருகை தரும்
கழக இளைஞரணி செயலாளர்,
இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு இளைய தலைவர்
உதயநிதி ஸ்டாலின்
அவர்களை வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்
மாண்புமிகு தா.மோ.அன்பரசன்
குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர்
திருமிகு மாதவரம் சுதர்சனம் M.L.A.,
சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர்
திரு க.செல்வம் எம்.பி. காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர்
SRL.இதயவர்மன் Ex.M.L.A.
திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர்
ஜி.சி.அன்புச்செழியன்
தலைமை செயற்குழு உறுப்பினர்
எம்.சேகர்
திருப்போரூர் (தெ) ஒன்றிய செயலாளர்
வி.விஜயகுமார் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்
மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், உற்றார் உறவினர்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
மணமக்கள்
ந.ப.கருணாநிதி
M.A.B.L., (Hons) M.L., M.B.A., M.S.W., M.Phil., P.hd.,
தே.மேனகாதேவி M.E.,
நாள் • 10-11-2023 வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணியளவில்
இடம் • ஸ்ரீ ராமலட்சுமிபேரடைஸ்
மாதவரம், சென்னை.
வரவேற்று மகிழும் மு.தேவராஜ்
திருப்போரூர் பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி மன்ற தலைவர்
D.செங்குட்டுவன் B.E.,
மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்



கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி மற்றும் விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதியில் அடங்கிய 250க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 7 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளத்தை பருவ கால மழை இல்லாததால் படைப்புழு தாக்கியுள்ளது. அவற்றை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் கீழ்ஆதனூர், புலிவலம், மலையனூர், சிறுபாக்கம் ஆகிய கிராமங்களில் மக்காச்சோளத்தைப் பார்வையிட்டு விவசாயிகளிடம் முதலமைச்சர் அவர்களிடம் ஆய்வறிக்கையை வழங்கி நிவாரணம் பெற்று தருவதாக ஆறுதல் கூறினார். உடன் மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் வீ. அமிர்தலிங்கம், கே.என். டி.சங்கர் ஆகியோர் உள்ளனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோனில் 08.11.2023 அன்று ஆய்வு மேற்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன் உட்பட பலர் உள்ளனர்.

### அரசு தலைமைக் கொறடா கோவி.செழியன் தலைமையில்

# நெல்லையில் சட்டப் பேரவை மனுக்கள் குழு ஆய்வுக் கூட்டம்!

### குழு உறுப்பினர்கள் - மாவட்ட ஆட்சியர் பங்கேற்பு!

நெல்லை, நவ.10 -

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் சட்டப்பேரவை மனுக்கள் குழு ஆய்வுக்கூட்டம் சட்டப்பேரவை மனுக்கள் குழு தலைவர் அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் தலைமையில் குழு உறுப்பினர்கள் ஐயப்பன் (கடலூர்)கந்தசாமி (சூலூர்) நல்லதம்பி (திருப்பத்தூர்) பொன்னுச்சாமி (சேர்ந்தமங்கலம்) முத்து ராஜா (புதுக்கோட்டை) ராதா கிருஷ்ணன் (விருத்தாச்சலம்) மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன்,சட்டப்பேரவை துணைச் செயலாளர் ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் சட்டப் பேரவை மனுக்கள் குழு தலைவர் அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன் பேசியதாவது:-

நெல்லை மாவட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து இன்றைய தினம் வண்ணார்பேட்டை புறவழிசாலை,கங்கைகொண்டான், மானூர் உள்ளிட்ட இடங்களில் நேரில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. முதலமைச்சர் அவர்களால் அவ்வப்போது அறிவிக்கப்படும் மக்கள் நலத் திட்டங்களை மாவட்ட ஆட்சி தலைவர், மாவட்டத்தில் உள்ள அரசு உயர் அதிகாரிகளும் பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் சென்றடையும் விதமாக சிறப்பாக நிறை வேற்றி வருகிறார்கள். சட்டப்பேரவை மனுக்கள் குழுவை பொறுத்தமட்டில் மனுதாரரின் கோரிக்கைகள் பொது நலனை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்றும், சட்டப் பேரவை குழுக்களில் மனுக்கள் குழு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த குழுவாகும். இம் மனுக்கள் குழு மூலம் பொது மக்களின் முக்கிய பிரச்சினைகளை தேர்வு செய்து நேரடியாக ஆய்வு செய்திட மனுதாரரையும் அதற்குரிய உயர் அதிகாரி அவர்களை நேரடியாக அழைத்து பல்வேறு பிரச்சினைகளை உடனடியாக தீர்வு செய்யக்கூடிய ஒரு குழுவாக செயல்படுகிறது.

இந்த வகையிலே பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த மனுக்கள் 89.மனுக்கள் மீது ஆய்வு செய்யப்பட்டது மனுக்கள் குழுவில் விசாரிக்கப்பட்ட மனுக்களுக்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இக்குழு பரிந்துரை செய்யப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இம்மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசின் பல்வேறு திட்டங்களை சிறப்பாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவாக அளிக்க வேண்டும்.

இவ்வாறு சட்டப் பேரவை மனுக்கள் குழு தலைவர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்தார்.

முன்னதாக 8 பயனாளிகளுக்கு பாளையங்கோட்டை வட்டம் ஆக்கிரமிப்பு வரன்முறை பட்டாக்களையும், 2 மாற்று திறன் பயனாளிகளுக்கு திறன் பேசிகளையும், சட்டப்பேரவை மனுக்கள் குழு தலைவர் முனைவர் கோவி. செழியன் வழங்கினார்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் சுகன்யா,ரேவதி, மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் முகமது ஷபீர்ஆலம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுரேஷ் உள்பட அரசு அலுவலர்கள் மனுதாரர்கள் கலந்து கொண்டனர்.

### வேடசந்தூரில்

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோனில் திடீர் ஆய்வு!

### அமைச்சர் அர.சக்கரபாணி மேற்கொண்டார்!

திண்டுக்கல், நவ. 10 -

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூரில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோனில் திடீரென்று நேற்று முன்தினம் (08.11.2023) ஆய்வு மேற்கொண்டார். அவருடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.ந.பூங்கொடி உடனிருந்தார்.

ஆய்வின்போது, உணவு அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தீபாவளி, கிறிஸ்துமஸ், தைப்பொங்கல் திருநாள் காலங்களில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிமைப்பொருட்கள் தட்டுப்பாடு இன்றி, தரமாக வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்களில் பொருட்கள் இருப்பு தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து நியாயவிலைக் கடைகளுக்கும் 100 சதவீதம் பொருட்கள் சென்றடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக சென்னையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 08.11.2023 அன்று வேடசந்தூர் குடோனில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 10 வட்டங்களிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்கள் உள்ளன. குஜிலியம்பாறை மற்றும் திண்டுக்கல் மேற்கு வட்டங்களில் மட்டும் குடோன்கள் இல்லாமல் இருந்தது. அங்கும் குடோன்கள் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் உள்ள 300 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக குடோன்களை சீரமைக்க ரூ.90.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள். அதன்படி, குடோன்களில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வேடசந்தூர் குடோனில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நெல் கொள்முதல் செய்து, மழையில் நனையாமல் பாதுகாப்பதற்காக குடோன்கள் அமைக்க ரூ.238 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டார்கள். அதன்படி, 2.86 இலட்சம் மெ.டன் நெல் சேமிக்கும் அளவிற்கு குடோன்கள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1.20 இலட்சம் மெட்ரிக் டன் நெல் சேமிக்கும் அளவிற்கு குடோன்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் சமார் 4.00 இலட்சம் மெ.டன் நெல் சேமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள 36,000 நியாய விலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அரசி, பருப்பு, சர்க்கரை, கோதுமை, பாமாயில் போன்ற பொருட்கள் தரமானதாக வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, அனைத்து நியாயவிலைக் கடைகள் மூலம் தரமான பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நெல் அரவை செய்வதற்காக 700 அரவை ஆலைகள் தேர்வு செய்யப்பட்டு, கருப்பு, பழுப்பு நிற அரிசி இல்லாத வகையில் கலர்சாப்டர் பொருத்தப்பட்ட இயந்திரங்கள் மூலம் தரமான அரிசி உற்பத்தி செய்யப்பட்டு, பொதுமக்களுக்கு விநியோகிக்கப் படுகிறது.

நியாயவிலைக் கடைகளில் பொருட்கள் வாங்கும் போது, கைரேகை பதிவுகளில் சில நேரங்களில் சிரமங்கள் ஏற்படுவதால், கண் கருவிழி பதிவு மூலம் பொருட்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதத்திற்குள் 30 சதவீத பணிகள் முடிக்கவும், இன்னும் 9 மாதங்களில் பணிகள் முழுமையாக முடிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது, என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்வீ.பாஸ்கரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

### திருப்போரூர் பேரூர் செயலாளர் - பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ் - பொதுக்குழு உறுப்பினர் என்.பரந்தாமன் இல்ல மணவிழா!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் - மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, நவ.10 -

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் காலவாக்கம் நினைவில் வாழும் ஆர்.முனுசாமி, மு.காளியம்மாள் மற்றும் பையனூர் நினைவில் வாழும் ஆறுமுகம் நலமுடன் கிளியம்மாள், ஆகியோரின் பேத்தியும் திருப்போரூர் தி.மு.க. செயலாளரும், பேரூராட்சி மன்றத் தலைவருமான மு.தேவராஜ், பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் செல்வி தேவராஜ் மகள் தே.மேனகாதேவிக்கும், சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், வடபெரும்பாக்கம் நினைவில் வாழும் எம். நடேசன்ஏகம்மாள் மற்றும் எருக்கஞ்சேரி நினைவில் வாழும்குட்டியப்பன்வள்ளியம்மாள் ஆகியோரின் பேரனும் தி.மு.க. தலைமை பொதுக்குழு உறுப்பினரும் வழக்கறிஞருமான நா.பரந்தாமன், உஷாராணி பரந்தாமன் ஆகியோரின் மகன் ந.ப.கருணாநிதிக்கும் திருமணம் சென்னை60, மாதவரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ ராமலஷ்மி பேரடைஸ்ல்(ஏ.சி) இன்று (10.11.2023 - வெள்ளிக்கிழமை) காலை



9.00 மணியளவில் கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்மாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில்மகேஷ் பொய்யாமொழி, இராணிப்பேட்டை ஆர்.காந்தி, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், டி.ஆர். பி.ராஜா, சி.வெ.கணேசன் மற்றும் தயாநிதி மாறன் எம்.பி, க.செல்வம் எம்.பி, கலாநிதி வீராசாமி எம்.பி, இ.கருணாநிதி எம்.எல்.ஏ, எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன் எம்.எல்.ஏ, மீ.அ.வைத்தியலிங்கம் முன்னாள் எம்.எல்.ஏ, எஸ்.எஸ்.பாலாஜி எம்.எல்.ஏ, எஸ்.ஆர்.எல். இதயவர்மன், இரா.கிரிராஜன் எம்.பி, டி.கே.எஸ். இளங்கோவன், ஆவடி சா.மு.நாசர், எம்.எல்.ஏ, தா. இளையஅருணா,எம்.சி, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ, துரைசாமி மாவட்ட அவைத் தலைவர், து.மூர்த்தி முன்னாள் எம்.எல்.ஏ, மாமல்லபுரம் வி.விஸ்வநாதன், ஆர். டி. சேகர், எம்.எல்.ஏ,

ஜே.ஜே.எபிநேசர் எம்.எல்.ஏ, வி.தமிழ்மணி முன்னாள் எம்.எல்.ஏ, ஜி.சி.அன்புசெழியன், தலைமைசெயற்குழு உறுப்பினர், பையனூர் பி.சேகர், வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, தாயகம் கவி எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, மேயர் ஆர்.பிரியா ராஜன், தாம்பரம் மேயர் கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், ஆர்.டி. அரசு முன்னாள் எம்.எல்.ஏ, டி.யுவ ராஜ் பேரூராட்சி தலைவர், எஸ்.அப்சர்அலி, வி.சந்திரன், ஆர்.பரசுராமன், பூச்சி முருகன், கே. ஜெயக்குமார் எம்.பி, துரை சந்திரசேகர் எம்.எல்.ஏ, க.சுந்தரம், இ.ஏ.பி. சிவாஜி, சி.எச்.சேகர், அழகிரிசதாசிவம், ரா.நரேந்திரன், மு. ரமேஷ், குமாரி ரமேஷ் காலவாக்கம்.

மிசா.பா.மதிவாணன், வி.ராமநாதன், குறிஞ்சி எஸ்.கணேசன், மு.ராஜேந்திரன், டி.ராமகிருஷ்ணன், பி.அறிவழகிபாலகிருஷ்ணன், எம்.ஆனந்தன், ஜெ. ஜெய்மதன், இரா.முருகேசன், பு.ஏ.ராஜி, பி.சாந்தி, என்.சந்திரன், என்.சிவலிங்கம் மாலதி,

பகுதிச் செயலாளர்கள் ஜி.துக்காராம், எம்.நாராயணன், பெ.சரவணன், ஜி. ராஜேந்திரன், தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், மா. அருள்தாசன்,மீ.வே.கருணாகரன், ஜி.தயாளன், க.ஜெயராமன், அ.முருகன், வா. பெ.சுரேஷ், செந்தில்குமார், ஜெபதாஸ்பாண்டியன், இரா.லட்சுமணன், படப்பை மனோகரன், மறைமலைநகர் சண்முகம், பம்மல் கர்ணா, ஜெய்குமார், சேகர், தமிழ்மணி, ஆதிமாறன், நரேந்திரன், ஏ. அன்புசெல்வன், ஆராமுதன், சந்தானம், வந்தேமாதரம், கோபால், கருணாநிதி, எம். கே.டி.கார்த்திக், நரேஷ், கண்ணன், தேவேந்திரன், சங்கர், நடராஜன், சத்தியமூர்த்தி, அருள்தேவி, ஜெயச்சந்திரன், செங்குட்டுவன், பச்சையப்பன், ரமேஷ், கோல்டு பிரகாஷ், பிரபு, விஜயகுமார், கோவிந்தன், சதீஷ்,

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பிரதிநிதி கள் எஸ். நந்தகோபால், தங்கமணிதிருமால், நா.ஜெகதீசன், வழுதிகை நா.செல்வசேகரன், எஸ்.நந்தினி, அ.ராஜேந்திரன், கா.காசிநாதன், ஏ.சந்திரன், பி.கனிமொழி, டி.கார்த்திகேயன், ஜி.துரைசாமி, இ.ஏழுமலை, எம்.குணசுந்தரி, பி.ஆஸ்னா மெரிசியா, மு.சிவக்குமார், பி.தம்பையா, கே.பி.சொக்கலிங்கம், டி.சி.வி.விஜயகுமாரி, உமாசரவணன், சரண்யா கலைவாணன், கவி கணேசன், சுசீலாராஜா, பானுமதிசுந்தர், பாரதிசரவணன், என்.ராமு, ஆர். தமிழ்ச்செல்விரமேஷ், தமிழரசிகுமார் ஆர்.இ.ஆர்.விப்ரநாராணயன், என்.ஜானகிராமன், கே.ஆஷா கல்வி நாதன், இரா.ஏ.பாபு, பண்ணை இ.சந்திரசேகர், ஜி.ரவிச்சந்திரன்,

திருப்போரூர் சிற்றூர் போரூர் நகர ஒன்றிய கழக தோழர்கள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி மற்றும் உள்ள கழகத்தின் துணை அமைப்பினர் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பேரூராட்சி தலைவர் மு.தேவராஜ், செல்வி தேவராஜ், வழக்கறிஞர் என்.பரந்தாமன், உஷாராணி பரந்தாமன், ஆர்.வெங்கடேசன், ஆர்.ராஜாராம், ஆர்.தர்ஷினி ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்ட பொறியாளர் அணி து.அமைப்பாளர் தே.செங்குட்டுவன் நன்றி கூறுகிறார்.



திருப்பத்தூர் மாவட்டம், கிழக்கு ஒன்றியம், பெருமாபட்டு ஊராட்சியில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கே.ஆர். திருப்பதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சங்கர், கருணாநிதி, கூட்டுறவு சார்பதிவாளர்கள், தர்மேந்திரன், சண்முகம், கோவிந்தன், டிப்பு சேகர், ஆனந்தன், ஒன்றிய நிர்வாகிசந்திரசேகரன், ஊராட்சி மன்றத் தலைவர் மல்லிகா தேவராஜ், ஒன்றிய குழுத் தலைவர் யுவராஜ்ராவ், ஊராட்சிமன்ற துணை தலைவர் பூர்ணிமா தேவராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### பீகார் துணை முதல்வர் - அன்பு சகோதரர்

# தேஜஸ்வி யாதவ் பிறந்த நாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, நவ. 10 -

பீகார் மாநிலத் துணை முதலமைச்சர் தேஜஷ்வி யாதவ் அவர்களின் பிறந்த நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள், தமது சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பீகார் மாநிலத் துணை முதலமைச்சரும் எனது அன்பு இளவலுமான தேஜஷ்வி யாதவ் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

சமூகநீதியின்பால் தாங்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பு பாராட்டுக்குரியது. வெற்றியும், உடல்நலனும், சமத்துவச் சமுதாயத்தை நோக்கித் தொடர்ந்து முன்வைக்கும் அடிகளும் நிறைந்ததாய் வரும் ஆண்டு தங்களுக்குத் திகழ விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.



வில்லியனூர் தொகுதியைச் சேர்ந்த முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், முதிர்கன்னிகள், திருநங்கை என 100 பயனாளிகளுக்கு அரசின் மாதாந்திர உதவித் தொகை பெறுவதற்கான அடையாள அட்டையை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா வழங்கினார்.

### காலணி – தோல் பொருட்கள் உற்பத்தி – பதனிடுதல்

# தொழிலாளர்களுக்கான நல வாரிய சிறப்பு முகாம்!

## நெல்லிக்குப்பம் புகழேந்தி பங்கேற்பு!

வேலூர், நவ. 10

வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பணிபுரியும் காலணி, தோல்பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் மற்றும் அந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் வாரிய பலன்கள் குறித்த ஆலோசனைக் கூட்டம், தொழிலாளர் உதவி கமிஷனர் (சமூக பாதுகாப்பு திட்டம்), வேலூர் அலுவலகத்தில் நேற்று நடந்தது.

இதில், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழி லாளர்கள் நலவாரிய தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்பு விருந் தினராக பங்கேற்று, சிறப்பு முகாம் மூலமாக பதிவு செய்த 81 தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை கள் வழங்கி பேசியதாவது: தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நலத்திட்ட உதவிகளை விரைந்து வழங்கவும், தகுதியுள்ள புதிய தொழிலாளர்களை வாரியத்தில் சேர்க்க சிறப்பு மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தவும், அதிக தொழிலாளர்களை வாரியத்தில் பதிவு செய்யவும் நட வடிக்கை எடுக்க வேண்டும். வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நலவாரி யத்தில் மொத்தம் 3 ஆயிரத்து 33 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். இதில், ஆயிரத்து 182 பேருக்கு 23 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்களுக்கு என தனியாக நலவாரியம் உருவாக்கி செயல்பட்டு வருகிறது.

இந்த தொழிலில் ஈடுபடும் 18 முதல் 60 வயது வரையுள்ள தொழிலாளர்கள், தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழி லாளர்கள் நலவாரியத்தில் ஆன்லைன் மூலம் கட்டணமின்றி பதிவு செய்யவும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்டணமின்றி புதுப்பிக்கவும் அரசு வழிவகை செய்துள்ளது. பதிவு செய்த உறுப்பினர்களுக்கு திருமணம், மகப்பேறு, கல்வி, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம் மற்றும் விபத்து மரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உத வித்தொகைகள் வழங்கப்பட்டு வரு கிறது. இவ்வாறு அவர் பேசினார். கூட்டத்தில், வாரிய உறுப்பினர் கலைநேசன், தொழிலாளர் இணை கமிஷனர் புனிதவதி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மாவட்ட தொழிலாளர் உதவி கமிஷனர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் தொழிற்சங்க தரப்பு பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### சென்னை குடிநீர் வாரியம் சார்பில்

# அனைத்து மண்டலங்களிலும் குறைதீர்க்கும் கூட்டம்!

## சென்னை குடிநீர் வாரியம் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

சென்னைக் குடிநீர் வாரிய குறை தீர்க்கும் கூட்டம் 11.11.2023 (சனிக்கிழமை) அன்று குடிநீர் வாரிய 15 பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

சென்னைக் குடிநீர் வாரியம் சார்பில், குறை தீர்க்கும் கூட்டங்கள் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான குறை தீர்க்கும் கூட்டம் 11.11.2023 (சனிக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை குடிநீர் வாரிய அனைத்து பகுதி அலுவலகங்களில் நடைபெறும்.

இந்த குறை தீர்க்கும் கூட்டம் நடைபெறும் பகுதி அலுவலகங்கள் விபரம்:

பகுதி அலுவலகம் - 1- திருவொற்றியூர், பகுதி அலுவலகம் -2 - மணலி, பகுதி அலுவலகம் - 3 - மாதவரம், பகுதி அலுவலகம் - 4 - தண்டையார்பேட்டை, பகுதி அலுவலகம் - 5 - இராயபுரம், பகுதி அலுவலகம் - 6 - திரு.வி.க.நகர், பகுதி அலுவலகம் - 7 - அம்பத்தூர், பகுதி அலுவலகம் - 8 - அண்ணா நகர், பகுதி அலுவலகம் - 9 - தேனாம்பேட்டை, பகுதி அலுவலகம் -10 - கோடம்பாக்கம், பகுதி அலுவலகம் - 11 - வளசரவாக்கம், பகுதி அலுவலகம் - 12 - ஆலந்தூர், பகுதி அலுவலகம் - 13 - அடையாறு, பகுதி அலுவலகம் - 14 - பெருங்குடி, பகுதி அலுவலகம் - 15 - சோழிங்கநல்லூர்.


இந்த குறை தீர்க்கும் கூட்டங்கள் வாயிலாக பொதுமக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பகுதி அலுவலகங்களிலும் ஒரு மேற்பார்வைப் பொறியாளர் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

எனவே, இந்த குறை தீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று குடிநீர், கழிவுநீர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், குடிநீர், கழிவுநீர் வரி மற்றும் கட்டணங்கள், நிலுவையில் உள்ள குடிநீர், கழிவுநீர் புதிய இணைப்புகள் தொடர்பான சந்தேகங்களை நேரில் மனுக்கள் வாயிலாக தெரிவித்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், மழைநீர் சேகரிப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான விளக்கங்களையும் இக்கூட்டத்தின் வாயிலாக தெரிந்து கொள்ளலாம்.



இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள தோல் உற்பத்தி தொழிலாளர்களின் தற்போது உள்ள நிலைகளை நேரில் ஆய்வு செய்து தொழிலாளர்களின் பயனாளிகளுக்கு அரசு திட்ட உதவிகளையும் அரசு அடையாள அட்டைகளையும் தோல் உற்பத்தி தொழிலாளர் நலவாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி நேரில் வழங்கினார்.












சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி மற்றும் இளைஞர் அணி , மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நேற்று (9.11.2023) காலை திருவொற்றியூர் தேரடி சன்னதி தெருவில் "நீட் விலக்கு நம் இலக்கு" 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் இயக்கம் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் – மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்றது. இக் கையெழுத்து இயக்கத்தை கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்தார். இதில் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் ஆதி திராவிடர் நலக் குழு துணை செயலாளர் சி.தசரதன், வழக்கறிஞர் வீ.கண்ணதாசன், குறிஞ்சி எஸ்.கணேசன், ராமநாதன், சாந்தி பக்தன்,டி.ஏ.ராஜ், முருகேசன், ஆர்.சி.ஆசை தம்பி, எம்.வீ.குமார், கே.பிரபாவதி, இரா.குமரேசன், ஜெயராமன், சொக்கலிங்கம், திரவியம், க.வீ.கணேசன், சுசிலா ராஜா, தா.கார்த்திகேயன்,டி.சி.வி.மணிகண்டன், எஸ்.தமிழ் செல்வன், கேபிள் டிவி ராஜா, ஏகா.கார்த்திகேயன், ஆர்.டி.மதன்குமார், எம்.எம்.செந்தில் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### தேவகோட்டையில் வே.ரூசோவின் 25 ஆவது ஆண்டு நினைவு நாள்!

# அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் கழகத்தினர் அமைதிப் பேரணி!

## மு.தென்னவன் – தமிழரசி எம்.எல்.ஏ. – கழகத்தினர் அஞ்சலி!

சிவகங்கை, நவ.10-

சிவகங்கை மாவட்ட கழக முன்னாள் இளைஞர் அணி அமைப்பாளரும் , மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவரராக இருந்தவர் தேவகோட்டை வே.ரூசோ. இவர் 8.11.1988 ஆம் ஆண்டு மரணமடைந்தார்.

அவரது நினைவு நாளை ஒவ்வொரு வருடமும் நவம்பர் 8ம்தேதி மாவட்ட தி.மு.க. அமைதி பேரணி நடைபெற்று ரூசோவின் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நேற்று முன் தினம் 8ம் தேதி 25வது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு தேவகோட்டை தியாகிகள் பூங்காவிலிருந்து மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையில் அமைதி பேரணி நடைபெற்றது.

அமைதி பேரணி நகரத்தின் முக்கிய வீதியாக வந்து திருப்பத்தூர் சாலையில் உள்ள ரூசோவின் நினை விடத்தை வந்து சேர்ந்தது. ரூசோவின் நினைவிடத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், மாவட்ட துணைச் செயலாளரும், ரூசோவின் மனைவி திருமதி ஜோன்ஸ் ரூசோ, மகன் நிஷாந்த் ரூசோ, மருமகன் ராஜா ஸ்டீபன், மகள் நெம்மாநிபிலா ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அவரைத் தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், எம்.எல்.ஏக்கள் தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி, மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன்,கே.எஸ். எம்.மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன் கென்னடி, செயற்குழு உறுப்பினர்கள் தா.ராமையா, எஸ். முத்துதுரை,பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெ.மதார் சேட், கரு.அசோகன்,

பள்ளத்தூர் கே.எஸ். ரவி, அம்பலமுத்து, நகரச் செயலாளர்கள் பெரி.பாலா, என்.குணசேகரன், கா. பொன்னுச்சாமி, சி.எம். துரை ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் நாகனிரவி, பூபாலசிங்கம், எஸ்.சண்முக வடிவேலு, விராமதி மாணிக்கம், வே.ஆரோக்கிய சாமி, பூமணி, பி.செல்வ ராஜ், துரைராஜாமணி, எம். அண்ணா துரை, சுப.சின்ன துரை, கே.ஆர்.ஆனந்த், எம்.ஏ. கடம்பசாமி, வே. தமிழ் மாறன் கா.வெங்கட்ராமன், எம்.ஜெயராமன்,திருமலை முத்துராமலிங்கம், பேரூர் கழகச் செயலாளர்கள் ஆர். கார்த்திகேயன், கதிர்வேல், அசோக், கேபிஎஸ் பழனியப்பன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், துணை அமைப்பாளர்கள் கார்த்தி, பரணிகிட்டு, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப்பாளர் முகமதுகனி, வழக்கறிஞர் வே.காசிநாதன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில், மகளிரணி நிர்வாகிகள் திலகவதி கண்ணன், மார்கரெட் கமலா, மஞ்சுளா, பாக்கிய லட்சுமி,தெரஸா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, துணைஅமைப்பாளர் சிதம்பரம் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே. எஸ். நாராயணன், மாவட்ட அயலக அணிதுணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கென்னடி, மாவட்ட நெசவாளரணி துணை அமைப்பாளர் கண்ணன், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் த. ரா.நெடுஞ்செழியன், சீ.இரவி, ஒன்றிய, நகர்கழக நிர்வாகிகள் இளங்கோ பொருளாளர் அன்புச்செல்வம், கருணாநிதி, எழில் மாறன் மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அமைச்சர் பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் தென்னவன், தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. வீட்டின் முன்புறம் உள்ள ரூசோவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் வீட்டில் இருந்த ரூசோவின் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

தொடர்ந்து ரூசோவின் நினைவிடத்தில் பல்வேறு சமூக அமைப்பின் சார்பில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 15 ஆயிரம் அடியாக உயர்வு!

மேட்டூர், நவ.10

மேட்டூர் அணை நீர்வரத்து 15 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் நேற்று வியாழக்கிழமை) மாலை 56.42 அடியாக உயர்ந்தது.

வட கிழக்கு பருவ மழையின் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக காவிரியின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 10,514 கன அடியிலிருந்து 14,971 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 250 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையின் நீர் இருப்பு 22.09 டிஎம்சியாக உள்ளது.

### விகடன் குழுமத்தில் பணிபுரிந்த

# புகைப்படக்காரர் சு.குமரேசன் மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, நவ.10 -

விகடன் குழுமத்தில் புகைப்படதாரராக பணிபுரிந்த சு.குமரேசனின் மறைவுச் செய்தி அறிந்ததும் இரங்கல் தெரிவித்து செய்தி விளம்பரத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

தமிழ் இதழியலின் மூத்த புகைப்படக்காரர் சு.குமரேசன் (வயது 56) 09.11.2023 அன்று அதிகாலை மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகவும் மனவருத்தம் அடைந்தேன் சு.குமரேசன் அவர்கள் 30 ஆண்டுகள் விகடன் குழுமத்தில் தலைமைப் புகைப்படக்காரராகப் பணியாற்றி, அரசியல், சினிமா, விளையாட்டு, கலை, இலக்கியம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் பல்வேறு நிகழ்வுகளைப் பதிவு செய்த அனுபவம் கொண்டவர்.

சு.குமரேசன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், பத்திரிகைத் துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் இரங்கல் செய்தியில் குறிப்பி ட்டுள்ளார்.

### புகைப்படப் பத்திரிகையாளர்

# சு.குமரேசன் மறைவு!

## சென்னை நிருபர்கள் சங்கம் இரங்கல்!

சென்னை, நவ 10 -

புகைப்படப் பத்திரிக்கையாளர் சு.குமரேசன் மறைவுக்கு சென்னை நிருபர்கள் சங்கம் இரங்கல் தெரிவித்துள்ளது.

இது குறித்து அதன் தலைவர் ஆர்.ரங்கராஜ், செயலாளர் டி.சேகர் ஆகியோர் விடுத்துள்ள இரங்கல் வருமாறு:

மூத்த புகைப்படப் பத்திரிகையாளர், விகடன் குழுமத்தின் முன்னாள் தலைமைப் புகைப்படக் கலைஞர் சு. குமரேசன் நேற்று முன்தினம் (8-11-2023) மாரடைப்பு காரணமாக காலமானார் என்ற செய்தி அதிர்ச்சி அளிக்கிறது. அவரது குடும்பத்திற்கு சென்னை நிருபர்கள் சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறது.

30 ஆண்டுகளுக்கு மேலாக ஊடகத்துறையில் பணியாற்றினார். குறிப்பாக, விகடன் குழுமத்தின் தலைமைப் புகைப்படக் கலைஞராக குமரேசன் பல ஆண்டுகள் பணியாற்றினார்.

இவ்வாறு இரங்கல் செய்தி விடுத்துள்ளனர்.




மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டக் கழகத்தின் சார்பில் நீட் தேர்வை எதிர்த்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் கையெழுத்து இயக்கத்தை வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு துவக்கி வைத்து துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினார். கழக நிர்வாகிகள் முன்னோடிகள் உடன் உள்ளனர்.



சென்னை மாநகராட்சி, 160 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிருந்தாஸ்ரீ முரளிகிருஷ்ணன் மேம்பாட்டு நதியில் மகளீர்காக பிரத்தியேகமாக மகளீர் உடற்பயிற்சி கூடம் மக்கள் பயன்பாட்டிற்காக காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஆலந்தூர் வடக்கு பகுதி கழக செயலாளர் ப.குணாளன், மண்டல குழு தலைவர் தெற்கு பகுதி கழக செயலாளர் என்.சந்திரன், கோல்டு டி.பிரகாஷ், ஆர்.டி.பூபாலன், கே.பி.முரளிகிருஷ்ணன், கே.பாபுகுமார், இரா.கீர்த்திராஜ், கலாநிதி குணாளன், பி.செல்வகுமார், தி.மு.காமராஜ், க.சாந்தி ஆ.தீபக், பலாஅமுதநாதன், வாசிம், எம்.வி..குமார், வி.ராஜா, எஸ்.சகிம்சா, ஏ.ஆர்.ஸ்ரீதர், கா.விமலா, ஆ.ரூபன், ஆர்.எஸ்.சரவணன், சே.விக்கி, எஸ்.தீனா, பால ஆனந்த்குமார், அற்புதராஜ்,கோ.ரஜ்வேல், காஜாமெய்தின், கல்யாணி, கோவிந்தசாமி, ராஜி, சுசிலா, ஆர்பர்குமார், இரா.செந்தில், நாகராஜ், ரவி, ரம்ஜான், ஆட்டோ சீனா, ராஜேஷ், மணிகண்டன், சுலைமான், கவிகுமார், ஹமநாதன், லோகு, ஷரிப்கான் நாகப்பன் விக்க, விக்ரம், தினேஷ், அரவிந், விஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இலங்கை மலையகத் தமிழர் குடியேற்ற 200 -வது ஆண்டு விழா!

# ஒட்டுமொத்த தமிழர்களை அவமதித்துள்ளது மோடி அரசு!

## தீக்கதிர் தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ. 10 -

இலங்கையில் குடிய மர்த்தப்பட்ட மலையகத் தமிழர்களது 200-வது ஆண்டையொட்டி இலங்கையில் நடந்த விழாவில் முதல்வரின் காணொலி உரையை ஒளிபரப்ப தடை ஏற்படுத்திய மோடி அரசு மலையகத் தமிழர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழர்களையும் அவமதித்துள்ளது என 9.11.2023 தீக்கதிர் தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு :-

'சித்திரச் சோலைகளே உமைநன்கு திருத்த இப்பாரினிலே முன்னர் எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே' என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். காட்டை அழித்து வயலாக்க, மலையை உடைத்து சம மாக்க, ஆலைகளையும், சோலைகளையும் உரு வாக்க பாடுபட்ட தொழிலாளர் தோழர்களின் உழைப்பைப் போற்றும் வகையில் பாவேந்தர் இவ்வாறு பாடியிருப்பார்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு இந்தியத் தொழிலாளர்களை கொத்தடிமைகளாக அழைத்துச் சென்றது காலனியாதிக்க அரசு. அவர்களது உழைப்பை ஏகாதிபத்தியம் சுரண்டிக் கொழுத்தது. சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, மியான்மர் உள்ளிட்ட நாடுகளுக்கு தமிழர்கள் கொத்தடிமைகளாக கூட்டிச் செல்லப்பட்டனர்.

பிஜி தீவில் இந்தியப் பெண்கள் பட்டபாட்டினை மகாகவி பாரதியார் 'கரும்புத் தோட்டத்திலே அவர் கால்களும், கைகளும் சோர்ந்து விழும்படி வருந்துகின்றனரே' என்று அழுது எழுதியிருப்பார்.

இதேபோல இலங்கையில் தேயிலைத் தோட் டங்களை உருவாக்க பிரிட்டிஷ் ஆட்சியாளர்க ளால் அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் மக்கள் பட்டபாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல. இன்றைக்கு இலங்கையில் செழித்து வளர்ந்திருக்கும் தேயிலை மற்றும் காப்பிச் செடிகளின் வேர் களை விசாரித்தால் அதில் மலையகத் தமிழர்க ளின் ரத்தத் துளிகள் ஒட்டியிருக்கும்.

இலங்கையில் மலையகத் தமிழர்கள் குடி யேற்றப்பட்டு 200 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த நாடு விடுதலை பெற்ற பிறகும் மலைய கத் தமிழர்கள் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம். அவர்கள் இன்னமும் கூட முழு குடியுரிமை பெற்றவர்களாக, சம அந்தஸ்து உள்ளவர்களாக நடத்தப்படு கிறார்களா என்கிற கேள்வி எழுந்து கொண்டுதான் இருக்கிறது.




இந்த நிலையில் இலங்கையில் குடிய மர்த்தப் பட்ட மலையகத் தமிழர்களது 200ஆவது ஆண்டையொட்டி 'நாம் 200 ஒற்றுமை, பன்முகத் தன்மை மற்றும் பாரம்பரியத்தின் முழக்கம்' என்ற பெயரில் விழா ஒன்று இலங்கை அரசின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவில் பங்கேற்குமாறு தமிழ்நாடு முதலமைச்சருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள் ளது. அவர் பங்கேற்க இயலாத நிலையில் மாநில நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற் பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் பங்கேற்பதற்கு முறையான ஒப்புதலை ஒன்றிய அரசு வழங்கவில்லை. ஒன்றிய ஆட்சியாளர்களின் சின்னப் புத்தியால் தமிழக முதல்வரின் காணொலி உரையும் அங்கு ஒளிபரப்பப்பட வில்லை. மலையகத் தமிழர்களை மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழர்களையும் அவமதித்துள் ளது மோடி அரசு. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில்

# மாதவரம் 23 அ வட்டத்தில் நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம் !

## பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் பங்கேற்று துவக்கி வைத்தார்!

சென்னை, நவ. 10 -

இளைஞர் நலன் விளையாட்டு துறை மற்றும் சிறப்பு அமலாக்கத் திட்டத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில், தமிழ்நாடு முழுவதும் நீட் தேர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது.

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி,23 அ வட்ட திமுக சார்பில், நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து பெரும் நிகழ்ச்சி, காவாங்கரை மார்க்கெட் பகுதியில் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்து பொதுமக்களிடம் நீட் தேர்வினால் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தார்.

காவாங்கரை மார்க்கெட், பிள்ளையார் கோயில் தெரு, கே .எஸ். நகர், பிரதான சாலைகள், வழியாக பூரணமாக சென்று நீட் தேர்வுக்கு எதிரான துண்டு பிரசுரங்களை கழக நிர்வாகிகள் பொதுமக்களிடமும், வாகன ஓட்டிகளிடமும் பெற்றோர்களிடமும், வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் அ. ராமசந்திரன், எம்.அம்மு மூர்த்தி, பி.சுதாகர், பெ.முத்துகிருஷ்ணன், பொ.அறிவழகன்,து. பார்பன், அ.அப்துல்சமது, வி.ஹரி, எம். அமுதா மணிராஜ், ஆர். சுதா, யுவராணி, வைலட் ராணி, எஸ்.கலைச்செல்வி, சாமிநாதன், கே.ஜவகர், வாசுதேவன், மற்றும் நூற்றுக்கணக்கான நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, நிர்வாகிகள் பொது மக்கள் என அனைவரும் கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்தை பெற்றனர். பொது மக்கள் ஆர்வமாக கலந்து கொண்டு நீட் தேர்வுக்கு எதிராக தங்களது கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.



தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நீலகிரி மாவட்டம் உதகை கூடுதல் படகு இல்லம் வளாகம் பகுதியில் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி கழக அலுவலகம்,மர வீடுகள், மற்றும் கூடார வீடுகள். போன்ற பல்வேறு கட்டுமான பணிகளை ஆய்வு செய்தார்.




கடலூர் கிழக்கு மாவட்டம்,கடலூர்மாநகரம்தேவணாம்பட்டினம், கழக பொதுக்குழு உறுப்பினர் என்.டி.கணேசனின் துணைவியார் திருமதி.க.அம்சவள்ளி அவர்களின் மறைவையொட்டி கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்ஆர்கே. பன்னீர்செல்வம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். உடன் கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா மற்றும் மாவட்ட ,மாநகர கழக நிர்வாகிகள்உடனிருந்தனர்.



உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், கொம்பேறி பட்டி ஊராட்சி, மம்மானி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த குழந்தைகள் சு.குமார், அழகுமீனா ஆகியோரின் பெற்றோரிடம் முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.5.00 லட்சத்திற்கான காசோலையை 08.11.2023 அன்று வழங்கி ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன் உட்பட பலர் உள்ளனர்.

### மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை! மண்டலக் குழுத் தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில்!

# திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் ‘நீட் விலக்கு நம் இலக்கு’ கையெழுத்து இயக்கம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்தார்!

சென்னை, நவ. 10-

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் - மண்டலக் குழுத் தலைவர் தி.மு. தனியரசு நிகழ்ச்சி ஏற்பாட்டில், சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி மற்றும் இளைஞர் அணி , மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பில் நேற்று (9.11.2023) காலை 11 மணியளவில் திருவொற்றியூர் தேரடி சன்னதி தெருவில் “நீட் விலக்கு நம் இலக்கு 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துக்கள் இயக்கம் சிறப்பாக நடைபெற்றது.

இக் கையெழுத்து இயக்கத்தை கழக அமைப்புச் செயலாளர் முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்தார்.

இதில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் மாநில மீனவர் அணி துணை தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் - ஆதி திராவிடர் நலக் குழு துணை செயலாளர் சி.தசரதன், மனித உரிமை ஆணையர் வீ.கண்ணதாசன், மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், தலைமை செயற்குழு உறுப்பினர் ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி பக்தன், டி.ஏ.ராஜ், முருகேசன், பகுதி அவைத்தலைவர் ஆர்.சி.ஆசை தம்பி, பகுதி துணை செயலாளர் எம்.வீ.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா. குமரேசன், மாமன்ற உறுப்பினர் ஜெயராமன், சொக்கலிங்கம், திரவியம், க.வீ. கணேசன், சுசிலா ராஜா,

வட்ட கழக செயலாளர்கள் தா.கார்த்திகேயன்,டி. சி.வி.மணிகண்டன், எஸ். தமிழ் செல்வன், கேபிள் டிவி ராஜா, ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள், எஸ்.பாஸ்கர், நந்திவர்மன், ரஜினி பாபு, டில்லிராஜ், பழனிவேல், அப்துல்சலிம், பி.எஸ். சைலஸ், எத்திராஜ் , சந்தான கிருஷ்ணன், இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், மாணவர் அணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில், மற்றும்

துணை அமைப்பாளர்கள் மணிவண்ணன் , நந்தகுமார், தினேஷ் வேலன் , மருத்துவர் அணி திருவொற்றியூர் தொகுதி துணை அமைப்பாளர் ஆர்.ஜெகநாதன் , வட்ட கழக நிர்வாகிகள் , மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், கழக மூத்த முன்னோடிகள், பொது மக்கள் ஆகியோர் கையெழுத்து இயக்கத்தில் கலந்து கொண்டனர்.

### இரா.செந்தில்குமார் தலைமை ! வ.பெ.சுரேஷ் முன்னிலை !

# இராயபுரம் கிழக்கு பகுதிக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் !

## தா.இளையஅருணா வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்பு !

சென்னை நவ: 10 -

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்களுக்கு தலா 25 கிலோ அரிசி வழங்கும் நிகழ்ச்சி இன்று (10. 11.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் அறிவகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் தலைமை வகிக்கிறார்.

இராயபுரம் மேற்கு பகுதிச் செயலாளர் வ. பெ.சுரேஷ், என்.நவீன், ஆர்.வி.கணேஷ், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

த.ஜெயபாலன், கு. சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ.மோகன், எல்.சீனிவாசன், காட்டன்.ஜி.சதிஷ்குமார், என்.கிருஷ்ணன், க. கோவிந்தராஜ், பி.கண்ணன், எஸ்.சுரேஷ், க.கலைச்செல்வன், ஐசிஎப். பழனிவேல், என்.பாரி,வி. குமார், அத்தோ.பி.முனுசாமி, எம்.என்.வெங்கட், கே.லட்சு மணன், ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பிக்கிறார்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி,ஐட்ரீம் ஆர். மூர்த்தி எம்.எல்.ஏ, ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஜே.ஜே.எபினேசர் எம். எல்.ஏ பகுதி செயலலாளர்கள் : க.ஜெயராமன், அ. முருகன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், பி.டி.பாண்டிச்செல்வம், ந,மனோகரன், ஆர்எம்டி.ரவீந்திரன், இரா. கருணாநிதி, வே.சிவக்குமார், ஆர்.வெற்றிவீரன், மு.கோபி, எஸ். ஆர்.கமலகண்ணன், க. நாகம்மை, வி.தயாளன், கி.இராஜேந்திரன், நா.சண்முகம், டி.கமலக்கண்ணன், யு.மதிவாணன், எ.தமிழ் செல்வன், க.அமுல்,

லயோல கே.மதன், பி.சோமசுந்தரமூர்த்தி, க.கோவிந்தசாமி, எ.ரமேஷ் பாபு, லயன்.எம்.தீனதயாளன், லியோ.டி.சுரேஷ், கார்த்திக்செங்குட்வன், ரெயின்போ.என்.விஜயகுமார், ஜெ.காணிக்கைநாதன், எஸ்.குமார், க. சுரேஷ்,

ஜெ.புருஷோத்த மன், யூ.அனிபா, எஸ்.ஆண்ட்ரூ, எம்.எம்.சந்துரு, செட்டி மு.சந்திரன், கே.எஸ். குமார், எஸ்.மணிகண்டன், ஆர்.ராஜன், எஸ்.எஸ்.செல்வம், த.ரவி, தமிமுன் அன்சாரி, இரா.மருதுபாண்டியன், சு.சேகர், கே.என். பார்த்திபன்,

பி.மணிகண்டன், கே. சிவதனுஷ், இரா.முருகன், இரா.பாண்டியராஜ், என். தேவகுமார், வி.வி.தங்கராஜ், ஆர்.குருவம்மாள், ஜி.செந்தில்குமார், எம். டி.மதன்ராஜ், எ.கிருஷ்ண ஹரி கரன், எஸ்.மாரிமுத்து, ஜெ.கார்த்தி, ஆர்.சொப்னாதேவி, எஸ்.சரோன் ராஜ், எ.சூரியா, அ.ஆனந்தன், மேற்கு பகுதி நிர்வாகிகள் : எம்.கே.இஸ்மாயில், கு,ரமேஷ், எஸ். திருஞானம், வி. மலையம்மாள், இ.மதன்,

ஆர்.டி.ஜெயசங்கர், எஸ்.யுவராஜ், எஸ்.முகமது மொய்தீன், ஆர்.பொன்முடி, ந.குமார், எம். பாலாஜி, எ.அன்வர், எம். பாலசுப்ரமணி, வட்டச் செயலாளர்கள் : இரா. பாலன், எம்.எல்.ரவி, எஸ். புகழேந்தி, கொரியர் பி.முருகன், எல்.பாலாலட்சுமணன், ஜெ. கௌரீஸ்வரன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

பி.சேகர்,அ.ஞானசேகரன் ஆகியோர் நன்றி கூறிகிறார்கள்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பயணிகளுக்கான

# குறைகள் மற்றும் புகார்கள் அளிக்கும் உதவி மைய எண் அறிவிப்பு!

சென்னை, நவ.10-

அரசு போக்குவரத்துக் கழக பேருந்து இயக்கம் தொடர்பாக பொதுமக்கள் தங்களின் குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்க கட்டணமில்லா உதவி மைய எண் “1800 599 1500” என்ற 11 இலக்க எண் கடந்த 09.03.2023 அன்று போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் இருந்து வருகிறது.

பொதுமக்கள் மற்றும் பயணிகள் இந்த 11 இலக்க உதவி மைய எண்ணை எளிதில் நினைவில் வைத்துக்கொள்ள இயலவில்லை என்று பெறப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில், வருகின்ற “10.11.2023” முதல் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ள ஏதுவாக கட்டணமில்லா மூன்று இலக்க உதவி மைய எண் (149) அறிமுகப்படுத்தப் படுகிறது.

மேற்படி மூன்று இலக்க புதிய உதவி மைய எண் 149ஐ தொடர்பு கொண்டு, பொதுமக்கள் மற்றும் பயணிகள் தங்களது குறைகள் மற்றும் புகார்களை தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# பாலினம் - கொள்கை ஆய்வகத்தின் சின்னம்!

## மேயர் ஆர்.பிரியா வெளியிட்டார்!

சென்னை, நவ. 10-

பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சின்னம் (Logo) மற்றும் வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டார்.

பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில் பாலின தேவைகள் உள்ளடக்கிய சென்னையை உருவாக்குதல், கற்றறிந்தவை மற்றும் முன்னோக்கி செல்லும் வழி குறித்த நிகழ்ச்சி மேயர் திருமதி ஆர்.பிரியா தலைமையில் நேற்று (09.11.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மேயர் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சின்னம் (Logo) மற்றும் வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்திற்கான சின்னம் வடிவமைப்பதற்கான போட்டிகள் இந்திய அளவில் நடத்தப்பட்டு, நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சின்னத்தை வடிவமைத்தவருக்கு மேயர் பரிசினை வழங்கிப் பாராட்டினார். இதன் தொடர்ச்சியாக, *I Stand for Women Safety and Empowerment* என்று கையெழுத்துப் பலகையில் மேயர் எழுதி கையெழுத்திட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் பிப்ரவரி 2022 முதல் செயல்பட்டு வருகிறது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பில் பாலினத்தை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் கவனம் செலுத்தும் ஒரே நகரமாக சென்னை உள்ளது. சென்னை நகரத் திட்டமிடலில் பெண்களின் தேவைகளை ஒருங்கிணைக்க, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகமானது சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், காவல்துறை மற்றும் இரயில்வே போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது.

பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம் பல்வேறு கொள்கைகளை மதிப்பாய்வு செய்து, உட்கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் சேவைகளில் பாலின உள்ளடக்கத்திற்கான பரிந்துரை குறிப்புகளை வழங்குகிறது. பங்குதாரர்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையில் பயிற்சிப் பட்டறைகளும் நடத்தப்படுகிறது.

மேலும், நகரத்தில் பெண்களின் அணுகல் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த பிரச்சாரங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. பொது இடங்கள் மற்றும் பொதுப் போக்குவரத்தில் பெண்களின் பாதுகாப்பு பற்றிய அடிப்படை ஆய்வின் கண்டுபிடிப்புகளும் பகிரப்பட்டு வருகிறது. 1913 என்ற உதவி எண் மூலமாக பெறப்படும் விவரங்களை வைத்து பாலினம் சார்ந்த பிரச்சினைகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றப்பிரிவு) திருமதி கல்பனா நாயக், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.சரவண பவானந்தம் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டக் கழக அவைத்தலைவர் சிவ.மாணிக்கம் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பளிங்காநத்தம் கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அன்னாரின் திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் இராஜேந்திரன், செயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குன்னூர் மு. அரங்கநாதன்
### நவம்பர் 10 (2014)



**நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.**

**குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.**

**குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.**

**கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.**

**இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா கஞ்சனூர் கோ.கண்ணையன்
### நவம்பர் 10 (1988)




**கழகம் துவங்கிய நாள் முதலே தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி அவர்களோடு இணைந்து கழகப் பணியாற்றியவர்.**

**கஞ்சனூர் கிளைக் கழகச் செயலாளர், திருப்பனந்தாள் ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கஞ்சனூர் ஊராட்சித் தலைவராகவும் – நிலவள வங்கி துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


கலைஞர்
மகளிர் உரிமைத் திட்டம்
விரிவாக்க நிகழ்ச்சி
நாள் : 10.11.2023 வெள்ளிக்கிழமை
இடம் : கலைவாணர் அரங்கம், சென்னை
ARASU ARTS
உரிமைத் தொகை கோப்பில்
முதல்வரின் கையெழுத்து!
பெண்ணின் பெருமை போற்றும்
வரலாற்று பொன்னெழுத்து!!
சொன்னதைச் செய்தார்! செய்வதையே சொல்வார்!
அன்புடன்
பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் – இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

# திராவிட சினிமா


31

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

படங்கள் உதவி : ஞானம்







# மருதிருவர் இல்லாத சிவகெங்கைச் சீமை!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

*ஆதார நூல்கள்: சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம்மானையும்- சர்க்கார் வெளியீடு; திருநெல்வேலி மானுவல்; ராமனாதபுரம் மானுவல்; மேஜர் வெல்ஷின் நாட்குறிப்பு; History Of Madras Army; Caldwell's History Of Tinnevelly:*

ஒரு தமிழ்த் திரைப்படம் இப்படியான அறிமுக அட்டையுடன் (டைட்டில் கார்டு) தொடங்கியது என நம்புவது சற்றுக் கடினம்தான். ஆனால், இப்படியான அறிமுகத்துடனேதான் ஆரம்பிக்கிறது 'சிவகெங்கைச் சீமை'. அதன் நில எல்லைகள், கிழவன் சேதுபதியின் மறவர் நாட்டு வரலாறுகள் பேசப்பட்டு, இறுதியாக வீர வேலுநாச்சியாருக்குப் பின்னர் மருதுபாண்டியர்கள் (பெரிய மருது, சின்ன மருது) அரியணை ஏறியதையும், வேலுநாச்சியாரின் மறைந்த கணவரின் பங்காளிகளான படமாத்தூர் உடையணத் தேவருடனான அவர்களது முரணும், வரலாறாகக் குரல்மொழியாக விளக்கப்படுகிறது. ஆனால், இந்த நீண்ட அறிமுகத்தால், திரைக்கதை பலவீனமாவதைப் பார்ப்போம். ஆம், வரலாற்று முரணை வாய்மொழியாகப் பேசி கதைக்களத்தைக் கற்பிதமாகக் கட்டமைத்ததன் விளைவு இது என்பேன்.

இனி, தமிழ் நிலத்தின் ஆங்கிலேய எதிர்ப்பு குறுநில மன்னர்கள், ஜமீன்களில் யார் மிகப் பிரபலமானவர் என்ற கேள்விக்கான பதிலைப் பார்ப்போம். அநேகமாகப் பலரும் வீரபாண்டிய கட்டபொம்மன் என்று சொல்லும் வாய்ப்பு அதிகம் என்று கருதுகிறேன். கொஞ்சம் வேடிக்கையானதாகத் தோன்றினாலும், அதற்கு ஒரு வகையில் காரணம் இரண்டு திரைப்படங்கள் என்று எண்ணுகிறேன். ஒன்று 'வீரபாண்டிய கட்டபொம்மன்', இரண்டாவது 'சிவகெங்கைச் சீமை'. ஓரளவில் சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன் எனும் நடிகர்களின் பாத்திரமேற்பு, நடிப்பு காரணமாகத் தோன்றினாலும், திரைக்கதையமைப்பே பெரும் காரணமெனக் கருதுகிறேன்.

## இருப்பை இருட்டடிக்கும் நடிப்பு

'சிவகெங்கைச் சீமை' படத்தின் 'நாயக மையமாக' மருதிருவர் இல்லையென்பது கவனத்துக்குரியது. அதன் நாயகனான முத்தழகு ஒரு வரலாற்றுப் பாத்திரமல்ல. ஒரு வகையில் முத்தழகு சாமான்யனான திராவிட நாயகனாகவும் இருக்கிறான். ஆனால், திரைக்களத்தில் 'திராவிட நாயகத்துவத்துக்கான' வாய்ப்பும் அறவே இல்லை. ஒரு பாடல் காட்சியில் குதிரையில் ஆரோகணித்தபடி 'வீரர்கள் வாழும் திராவிட நாட்டை வென்றவர் கிடையாது' எனப் பாடுகிறான். அந்தப் பாடலிலேயே **'மன்றம்', 'முரசொலி'** எனத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நடத்திய பத்திரிகைகளின் பட்டியல் வருகிறது.



இன்னொரு காட்சியில் ஆங்கிலேய ஆட்சி ஒழிந்தால், திராவிட மக்கள் விடுதலை பெறுவார்கள் எனப் பேசுகிறான். மற்றபடி எஸ்.எஸ்.ஆர் என்ற நடிகர் ஏற்ற பாத்திரம், மருதிருவர் இருப்பையே பலநேரங்களில் இருட்டடிப்புச் செய்கிறது. மருதிருவராக அவ்வை சண்முகம் மற்றும் பகவதி ஆகியோர் நடித்திருப்பதே அந்தப் பாத்திரங்களுக்கான முதன்மையை மறுக்கிறது.

கதைக்களத்தின் பெரும் முரண், முத்தழகு மற்றும் அவனது அண்ணன் சின்னச்சாமி (பி.எஸ்.வீரப்பா) தொடர்பானதாக மாறுகிறது. இன்னும் சரியாகச் சொல்வதானால் மருதிருவர் மற்றும் உடையணத் தேவர் வகையறாவின் பகைமுரண் முற்றிலுமாக, இந்தச் சகோதரர்களைச் சூத்திரதாரிகளாகக் கொண்டே நகர்கிறது.

## மருதிருவரை உயர்த்தாத யதார்த்தம்

வரலாற்றுப் பாத்திரங்கள் அல்லாதவர்களை மையமிட்டு, இயங்கும் திரைக்கதை, காட்சிக் களங்கள் மருதிருவர் மீதான கவனத்தைச் சிறிதாக்குகிறது என்பதே பிழை. இதற்கு இன்னொரு காரணியும் உண்டு. திரைப்படத்தின் நிகழ்களம் அசலான, மாடமாளிகை கூடகோபுரமற்ற எளிய சிவகங்கை அரண்மனையிலேயே எடுக்கப்பட்டது போன்ற தோற்றம் உள்ளது. கதை நிகழும் களங்களும் அசலான சிவகங்கை, காளையார் கோயில் பகுதிகளிலேயே படமாக்கப்பட்டுள்ளன. இதுவும் திரைக்கதையும் அற்புதமான யதார்த்தமான திரைப்பட உருவாக்கத்துக்கானதாக உள்ளனவெனினும், அவை ஒப்பீட்டில் மருதிருவரை, ஜெய்ப்பூர் மாளிகை முகப்பிலும், உப்பரிகையிலும் நடமாடும் கட்ட பொம்மன் நிலைக்கு உயர்த்த உதவவில்லை என்பதே கசப்பான உண்மை.

வீரபாண்டிய கட்டப்பொம்மன் படத்திலும் ஆதாரங்கள் பற்றிய தகவல்கள் உண்டெனினும், திரைக்கதை அமைத்த ம.பொ.சி / சக்தி கிருஷ்ணசாமி குழு, ஆதாரங்களைச் செதுக்கி கும்பினியார், ஆதிக்க எதிர்ப்பாளரான கட்டபொம்மனை, மாபெரும் சக்கரவர்த்தி நிலைக்கு உயர்த்தும் வேலையையும், கட்டபொம்மனை பெரும் நாயகத்துவ மையமாகவும் ஆக்க, சிவாஜி கணேசனின் கர்ஜனையும், பந்துலுவின் காட்சியாக்கமும் மீதத்தைச் செய்து முடித்தன. ஒரு வாதத்துக்கு கட்டபொம்மனாக ஜெமினி கணேசனையும், வெள்ளையத் தேவனாகச் சிவாஜியையும் வைத்துத் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்குமானால், என்னவாகியிருக்கும். அதுதான் இங்குப் பிரச்சினை.

காட்சியமைப்பில், இருப்பில் மருது சகோதரர்களைப் பின்னுக்குத் தள்ளி முத்தழகு முன்னணி பெறுகிறான். ஆங்கிலேயருடனான மோதல் என்றாலும், வசனங்களின் மையம் முத்தழகுவுக்குத்தான். எஸ்.எஸ்.ஆர் என்ற நடிகரின் வசன உச்சரிப்புக் கனலாய்த் தெறித்தாலும், ஓர் இடைவெளி விழுவதைத் தவிர்க்க இயலவில்லை. கூடுதலாக வரலாற்று நேர்மையுடன் கும்பினி அதிகாரி வெல்ஷும், மார்ட்டினும் ஆங்கிலத்திலேயே உரையாட, அதற்கெதிரான முத்தழகுவின் முழக்கம் எடுபடுவதில்லை. ஒரு நிமிடம் கட்டபொம்மன் திரைப்படத்தில் பானர்மேன் ஜாவர் சீதாராமனும், கட்டபொம்மன் சிவாஜியும் பேசும் அந்தப் பிரபலக் காட்சியுடன் ஒப்பிட்டால் உண்மை விளங்கும்.

களம் உச்சத்தை நோக்கி நகரும் வேளையில், கொலைபாதகத் துரோகி கணவனுக்காகச் சின்னச்சாமியின் மனைவி (எம்.என்.ராஜம்), மருதிருவர் மனைவியருடன் (ஜி.வரலட்சுமி) வாதிடுவதும், அதன் தொடர்ச்சியாக, மனம் மாறி அவளே தன் கணவனைக் கொல்வதான காட்சியும் பலவீனமானவை. இதில் வேடிக்கை, துரோகி அண்ணனைக் கொல்லச் சபதமேற்ற முத்தழகு, அந்தக் காட்சியில் கதறி அழுகிறான். இந்த அபத்தக் காட்சி உச்சக்காட்சிக்கு முந்தியதையதாக இருக்கும்.

## குழப்பமான திரைக்கதை குவிமையம்

கண்ணதாசனின் திரைக்கதை பாத்திரமேற்றவருக்காக அமைக்கப்பட்டுக் காட்சிப் போக்கினை வலுவிழக்கச் செய்கிறது. கூடுதலாக அவரே தயாரிப்பாளர், பாடலாசிரியர் என்பதால், படத்தில் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையில் ஏகப்பட்ட நல்ல பாடல்கள். முத்தழகுவின் காதலியாக நாட்டியப் பேரொளி கமலா. இந்தப் பாத்திரம் அசலாக மருதிருவர் அம்மானையிலிருந்து பெறப்பட்ட பாத்திரம். அம்மானை அந்த மருதமரங்களை மருதிருவராகக் கற்பித்து வளர்த்த பெண்ணொருத்தியை மையமாகக் கொண்டு பாடப்பட்டது.

கமலாவைப் பங்கேற்கச் செய்தது ஐந்து பாடல் காட்சிகளுக்காகவும், திரைப்படத்தின் இறுதியில் வரும் உக்கிரமான நடனத்துக்காகவும் என்பது தெளிவு. உண்மையாகவே அவரது நடனம் இடம் பெறும் இறுதிக் காட்சியை மிகச் சிறப்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார் இயக்குநர் சங்கர். அந்த நடனமும் இறுதிவரை இடைவெட்டுக் காட்சிகளூடாகத் தொடர்வது சிறப்புதான். ஆனால், மறுபடியும் திரைப்படத்தின் குவிமையம் எது என்பது குறித்த குழப்பத்தை விளைவிப்பதை மறுப்பதற்கில்லை.

நம் கவனத்தை ஆக்கிரமிக்கும் இறுதிக் காட்சியின் நடனம் சிவகங்கைச் சீமையின் வீழ்ச்சியைக் காவிய சோகமாகக் காட்சிப்படுத்தி மருது சகோதரர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் உள்ளிட்ட அனைவரையும் கொன்று குவித்த, கும்பினியாரின் கொடூரம் கவன எல்லையிலிருந்து விலகுகிறது. தூக்குக் கயிற்றைத் துணிச்சலாக எதிர்கொள்வதைக் கூட இறுதியாக முத்தழகுக்குக் கொடுத்து களத்தின் மையத்திலிருந்து முற்றிலுமாக மருதிருவரிடமிருந்து பறித்து விடுகிறது திரைக்கதை. ஆம், திரைக்கதையின் ஊசலாட்டம் கதைக்களத்தின் குவிமையத்தைச் சிதைத்துவிட்ட விபரீதம் நேர்ந்து விடுகிறது.

...படம் விரியும்

## சொல்லிய வண்ணம் செயல்!

**மா**நில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, சராசரி தனிநபர் வருமானம், பொறியியல்துறை ஏற்றுமதி ஆகியவை சார்ந்த புள்ளி விவரங்கள் சமீபத்தில் வெளியாகியுள்ளன. அவற்றில் இந்திய அளவிலான வரிசையில், தமிழ்நாடு முன்னிலை மாநிலமாக உள்ளது. பொறியியல் ஏற்றுமதியில் மகாராஷ்டிரா மாநிலத்துக்கு அடுத்து, தமிழ்நாடு 16 சதவிகிதத்துடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. அதேபோல், இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் மக்களின் தனிநபர் வருமான சராசரியைப் பொறுத்தவரையில், தெலங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களே முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளன. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் சராசரியாக ரூ.2.75 இலட்சமாக உள்ளது. முதல் இரண்டு இடங்களில் உள்ள மாநிலங்களில் சராசரி வருமானம் ரூ.3 இலட்சமாகும்.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பிலும், இந்த ஆண்டில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது. 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் பொருளாதார மாநிலமாக தமிழ்நாடு உருவாகும் என நமது முதலமைச்சர் அறிவித்து, அதற்கான சூழலையும் உருவாக்கி வருவதே இந்தப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. சொல்லிய வண்ணம் செயல் என்பதே 'திராவிட மாடல்' என உலகுக்கு அறிவிக்கிறது.

## :ப்ளாஷ்பேக்





## எடைக்கு நிகராக நாணயம்!



முரளிசுப்பையா

**பு**துக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி நகருக்கு 1982-ஆம் ஆண்டு பிப்ரவரி 22 அன்று வருகை தந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எடைக்கு நிகராக நாணயம் வழங்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவில், என் தந்தை ஆலவயல் சுப்பையா அவர்கள் தலைவர் முன்பாக உரையாற்றினார். விழாவில், சிறுகதை மன்னர் எஸ்.எஸ்.தென்னரசு, மாவட்டச் செயலாளர் பெரியண்ணன், அறந்தாங்கி இராஜன், தியாகராஜ காடுவெட்டியார் ஆகியோரும் உடனிருந்தனர். தன் வாழ்நாள் முழுவதும், தன் நெஞ்சில் ஏந்திய தலைவர் கலைஞர் வழியில் தடம் மாறாமல் பயணித்து, வாழ்ந்து மறைந்த என் தந்தை வழியில் நானும் இன்றைக்குக் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**-ஆலவயல் முரளிசுப்பையா, புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### தடை மீறி நாடகங்கள்!

**1950-ஆம் ஆண்டு அக்டோபர் 22-ஆம் நாள் தி.மு.கழகத் தலைமைச் செயற்குழுக் கூட்டம், சென்னை தங்க சாலைத் தெருவில் நடைபெற்றது. கழகப் பொதுக் கூட்டங்களுக்கு விதிக்கப்படும் தடை உத்தரவை மீறி, பேச்சுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றும், தடை செய்யப்பட்ட கழக நாடகங்களான பேரறிஞர் அண்ணா எழுதிய 'இலட்சிய வரலாறு', கலைஞர் எழுதிய 'தூக்குமேடை', புலவர் குழந்தை எழுதிய 'இராவணக் காவியம்' உள்ளிட்ட நாடகங்களைத் தடையை மீறி நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம்

296




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131